பக்கங்கள்-16 03,ஆடி.2016 விலை-30.00





# தினப்புயல்

நடுநிலை இதழ்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -160




## பிரபாகரனின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியே நாடுகடந்த தமிழீழ அரசிற்கான அங்கீகாரம்

## யாழில் அதிகரித்து வரும் பாலியல் தொழிலுக்கு அரசின் திட்டமிடப்பட்ட தூண்டுதலே காரணம்

## கிராமிய பொருளாதார மத்திய நிலையத்தினை ஓமந்தையில் அமைப்பதே சிறந்தது







Kandasamy Kovil Opposite / 165/ 5-A9, Kandy Road , Kilinochchi P: 0774547728 / 0212285314 / 0212285315 / e-mail: ebnmulti@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# பிரபாகரனின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியே, நாடுகடந்த தமிழீழ அரசிற்கான அங்கீகாரம்



தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டமானது மூன்று தசாப்த காலங்கள் நடைபெற்றுவந்தது என்பதை யாவரும் அறிந்ததே. இதில் ஆயுதக்குழுக்களின் தலையீடுகளுடன் தமிழ் மக்களுக்கான விடுதலையை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டபோதிலும் ஆயுதப்போராட்டமானது பின்னடைவைச் சந்தித்தது. ஹிட்லர் அவர்களால் இஸ்ரேல் மக்கள் சிதறடிக்கப்பட்டார்கள் என்பது வரலாறு. அவர்களை இனப்படுகொலை செய்தது என்பது மற்றைய வரலாறு. சிதறடிக்கப்பட்ட மக்கள் இணைந்ததன் பின்னரே இஸ்ரேல் என்கிற நாடு அங்கீகாரம் பெற்றது. அதுபோன்றே இன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சிதறடிக்கப்பட்டு 185 நாடுகளில் பரவலாக வாழ்கின்றனர். இதில் குறிப்பாக பிரான்ஸ், கனடா, சுவிஸ், பிரித்தானியா போன்ற நாடுகளில் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றார்கள். நாடுகடந்த தமிழீழ அரசின் தலைவராக இருக்கின்ற உருத்திரகுமார் தமிழீழ விடுதலைப்புலிகளது சர்வதேச செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார். அக்காலகட்டத்தின்போது நாடுகடந்த தமிழீழ அரசு உட்பட 450 அமைப்புக்கள் இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டது. அவ் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் பெயர் விபரங்களும் தடைசெய்யப்பட்டு வெளியிடப்பட்டது. இன்னமும் இத்தடை நீக்கப்படவில்லை. இருந்தபோதிலும் கடந்தவாரம் நாடுகடந்த தமிழீழ அரசு ஜெனீவா மனித உரிமைப்பேரவையில் நாடாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இவ்விடயம் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனது போராட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.


இவ்வரசாங்கத்தைப் பொறுத்தவரை இனப்படுகொலை என்பதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதனையே வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அவர்களும் தெரிவித்திருந்தார். மஹிந்த ராஜபக்ஷவை இனப்படுகொலையாளி என சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்கு இங்கிருக்கக்கூடிய பேரினவாத அமைப்புக்களோ, பௌத்த துறவிகளோ அனுமதிக்கப்போவதில்லை.

நாடு கடந்த தமிழீழ அரசு (Provisional Transitional Government of Tamil Eelam) என்பது அனைத்துலக சட்டமரபு நெறிகளுக்கு அமைவாக தமிழீழத்திலும், வெளிநாடுகளிலும் பரவிவாழும் தமிழீழத்தவர்களின் தற்காலிக அரசமைப்பு ஆகும். இலங்கையின் அரசியலில் தமிழர்கள் பங்கு பெறுவது சாத்தியம் அற்றதாகிவிட்டதால், அந்த தீவிற்கு வெளியிலேயே தமிழர்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கான முன்னெடுப்பு முயற்சிகளைத் தற்போதைக்குத் தொடருவதற்காக இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது.

பன்னாட்டு அமைப்பாக நிறுவப்பட்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசில் ஐக்கிய அமெரிக்கா, கனடா, நோர்வே, ஐக்கிய இராச்சியம் உட்படப் பல நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் உறுப்பினராக உள்ளனர். இதன் தலைவராக விசுவநாதன் உருத்திரகுமாரன் உள்ளார். இவ்வமைப்பின் அங்கத்தவர்களைத் தெரிவதற்காக இலங்கை தவிர்த்து வெளிநாடுகளில் வதியும் இலங்கைத் தமிழரிடையே மே 2010இல் தேர்தல்கள் இடம்பெற்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒன்றினை தற்பொழுதிற்கு உருவாக்குவதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவதற்காக வி.உருத்திரகுமாரன் தலைமையில் பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு பணியாற்ற செயற்குழு ஒன்று 2009 ஜூன் 16 அமைக்கப்பட்டது.

1976இல் வரையறுக்கப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரகடனத்தினதும், 1977இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்களால் ஒருமனதாக வாக்களித்து வரவேற்கப்பட்டதும், பின்பு 1985இல் திம்புப் பிரகடனத்தில் வெளிப்படுத்தப்பட்டதும், 2003இல் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரப்பகிர்வின் தளமாக அமைந்ததுமாகிய தமிழர் ஓர் தேசிய இனம், வடக்கு-கிழக்கு தமிழர் தாயக நிலம், ஈழத் தமிழரின் தன்னாட்சி உரிமை போன்ற அடிப்படைக் கோட்பாடுகளை ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகளின் ஆதார சுருதியாக ஏற்றுக்கொள்ளும் அனைத்துத் தமிழ் மக்களையும் ஒன்றிணைப்பது.



2001ஆம் ஆண்டு, 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களின்போது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் அரசியல் கட்சியாகத் தமிழ் மக்களினால் ஏற்று உறுதிசெய்யப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனும் ஈழத்தமிழரின் தன்னாட்சிக் கோட்பாட்டினை ஏந்தி ஆதரிக்கும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடனும் இணைந்து செயற்படுதல்.

சிங்களத் தேசத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கான தமிழர் தேசத்தின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தல்.

உலகு அனைத்தும் பரவிவாழும் ஈழத் தமிழர் மத்தியில் அனைத்துலக மதிப்பினைப் பெற்ற நிறுவனம் ஒன்றினுடன் இணைந்து வாக்காளர் பட்டியல் ஒன்றினைத் தயாரித்தல்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் வாக்கெடுப்பினை நடத்தி தமிழ்த்தேசியப் பேரவையினை தெரிவு செய்து இப்பேரவையினூடாக தமிழீழ அரசியல் யாப்பினை வடிவமைத்தலும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் நோக்குக்கு வழிகோலும் வகையில் பொதுவாக்கெடுப்பினை பன்னாட்டு மேற்பார்வையில் நடத்த வழிசெய்தலும்.

ஈழத் தமிழர் உலகப்பேரவை ஒன்றினையும், நிறைவேற்று அதிகாரக்குழு ஒன்றினையும் தெரிவுசெய்யும் முறைநெறிகளை வரையறை செய்தல்.

அரசுகளுடனும், பல் அரசுகள் சார்ந்த நிறுவனங்களுடனும் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

உலகெங்கும் பரவிவாழும் ஈழத் தமிழரின் சமூக, பொருண்மிய, பண்பாட்டு மேம்பாடுகளைத் துரிதப்படுத்தல்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையிலான வேறுபாடுகளை தமிழர் தன்னாட்சி உரிமைக்கு எதிரான பயத்தை தோற்றுவிக்கும் கருவியாகக் கொள்ளாமல், முஸ்லிம் மக்களுடன் இணைந்து இரு சமூகத்தினரும் ஒருமித்து பங்குபெறும் அரசியல் வழிமுறைகளை இனம்காணுதல்.

வடக்கு-கிழக்கில் வாழும் ஈழத் தமிழர்களினதும், உலகெங்கும் வாழும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களினதும் நலன்பேணும்வகையிலான செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளுடன் தற்போதும் நாடுகடந்த தமிழீழ அரசு சர்வதேச ரீதியாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் போராட்ட உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் தேசியத் தலைவர் பிரபாகரனுடைய நேரடித் தலைமையில் உருவாக்கப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசு அதனுடைய செயற்பாடுகளை தற்போது விரிவுபடுத்தி வருகிறது. இதன் காரணமாக இலங்கை அரசு தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதச் தடைச்சட்டத்தில் இருந்து விலக்கிக்கொள்ளுமா? என்ற கேள்வியும் எழுகின்றது.

சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றுள்ள நாடுகடந்த தமிழீழ அரசு இலங்கையில் நடைபெறும் பேச்சுக்களிலும் கலந்துகொள்ளுமா? இதற்காக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ன செய்யப்போகின்றது. பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் இரா.சம்பந்தன் அவர்கள் இந்த நாடுகடந்த தமிழீழ அரசை அங்கீகரித்து அவர்களையும் அரசியல் நீரோட்டத்திற்குள் இணைத்துக்கொள்வாரா? தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்டது என்பது உண்மை. இன்றைய காலத்தில் விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட சூழ்நிலையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கட்டளைகளை ஏற்று த.தே.கூட்டமைப்பு செயற்படுவார்களா? இவ்வாறான நிலையில் அடுத்தகட்ட நகர்வுகள் என்பது அரசிற்கு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் எனலாம். இவ்வாறாக இருப்பினும் நாடுகடந்த தமிழீழ அரசினால் தமிழ் மக்களுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றால் அது வரலாற்றில் இஸ்ரேல் நாடு உருவானதற்கு ஒப்பானதொரு செயலாக தமிழ் மக்களுக்கு அமையப்பெறும். ஆகவே அடுத்தகட்ட நகர்வாக தமிழ் மக்கள் நாடுகடந்த தமிழீழ அரசின் கரங்களைப் பலப்படுத்தவேண்டியதன் தேவை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தினைப் பொறுத்தவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனேயே தமது பேச்சுக்களை முடித்துக் கொள்வதற்கு விரும்புகின்றது. இனப்படுகொலையினை மூடிமறைப்பதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு பதவிகளை வழங்கியுள்ளது. இனப்படுகொலை இலங்கையில் இடம்பெற்றதா? என்பதை ஆராய பல்வேறு அமைப்புக்கள் தமது புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. அக்காலத்தில் இம்முன்னெடுப்புக்களை மேற்கொண்ட நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் அவை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. காணாமற்போனோர் தொடர்பான பரணகமவினது அறிக்கையினை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று கூறப்பட்டபோதிலும் அதனை சீரான நடவடிக்கையாக யாரும் கருதவில்லை. காணாமற்போனோர் ஆணைக்குழுக்கள் என வடகிழக்குப் பகுதிகளில் பிரதேச செயலகங்களின் ஊடாக விசாரணைகள் இடம்பெற்றது. ஏராளமானோர் கலந்துகொண்டு காணாமற்போன தமது உறவுகளுக்காக சாட்சியம் வழங்கியிருந்தனர். எனினும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை நாடுகடந்த தமிழீழ அரசு நிரூபித்துக்காட்டும் பட்சத்தில் சர்வதேச மட்டத்தில் எந்தவொரு நாட்டினது உதவிகளையும் இலங்கையரசு பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகும் எனலாம். அரசியல் செயற்பாடாக நாடுகடந்த தமிழீழ அரசு எதிர்வரும் தேர்தல் களத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுமா?. நாடுகடந்த தமிழீழ அரசு தமக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் என்கிற அச்சமும் அரசிற்கு இருக்கின்றது.

சர்வதேச ரீதியாக சிதறடிக்கப்பட்ட இஸ்ரேல் என்கிற நாடு தனது நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொண்டதுடன் தமது படைவீரர்களை உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக வைத்தும் உள்ளது. இப்படைவீரர்களது சிறப்புத் தாக்குதலே இதற்கான காரணமாகும். அங்கிருக்கும் ஒரு இராணுவ வீரர் இங்கிருக்கும் 100இராணுவ படைவீரர்களுக்கு சமன் எனக்கூறுவர். அவ்வாறு அவர்களது படையினர் பலமாக உள்ளனர். அதுபோன்று நாடுகடந்த தமிழீழ அரசு இலங்கையில் காலூன்றக்கூடுமாகவிருந்தால் உலக அரங்கில் பொருளாதார வளர்ச்சியிலும் மேலோங்கி, சர்வதேச நாடுகளுக்கு சவால்விடும் ஒரு அமைப்பாக மாற்றம்பெறும் என்பதில் சந்தேகமில்லை. நாடுகடந்த தமிழீழ அரசில் பாரிய முதலீட்டாளர்கள், புத்திஜீவிகள் உள்ளனர். பயங்கரவாத அமைப்புக்கள் என இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டவை இலங்கையில் கால்பதிக்குமாகவிருந்தால் வடகிழக்கு வாழ் தமிழ் மக்களின் அபிவிருத்தியானது பாரிய வளர்ச்சி நோக்கிப் பயணிக்கும் அத்துடன் இலங்கையரசு ஆட்டங்காண நேரிடும்.

படைபலத்தினை உருவாக்கிய விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், நாடுகடந்த தமிழீழ அரசின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு தமிழ் மக்களது கலை கலாசாரங்களை பாதுகாத்து தமிழ் மக்களின் நிலையான இருப்பை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. ஆகவே இதற்கான முன்னெடுப்புக்களை தமிழ் மக்களாகிய நாம் மேற்கொள்கின்றபோது நிச்சயம் தமிழ் மக்களுக்கென ஒரு தனியரசு நிறுவப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இரணியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஜெனீவா பேச்சுக்களும், தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டமும்

தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் தலையீடு என்பது யுத்தத்திற்கு முன்னரும், அதற்குப் பின்னரான காலப்பகுதிகளிலும் காணப்பட்டதை நாம் அறிந்ததே. காலத்தின் தேவைகருதி தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை முன்னெடுப்பதற்காக ஜெனிவா, ஒஸ்லோ, டோக்கியோ, தாய்லாந்து போன்ற நாடுகளில் சமாதானப்பேச்சுக்கள் தீவிரமாக இடம்பெற்றதுடன் இறுதியில் அவையனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

தமிழ் மக்களது உரிமைக்கானப் போராட்டம் 30 ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட போதிலும், குறிப்பாக வடகிழக்குப் பிரதேசத்தில் காணி மற்றும் பொலிஸ் உட்பட்ட இன்னும் சில அதிகாரங்களை அரசு தன்னகத்தே வைத்திருக்கிறது. யுத்தம் நிறைவடைந்து 06வருடங்களைக் கடந்துள்ளபோதிலும் இன்னமும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்க இலங்கையரசு தயக்கம்காட்டி வருகிறது.

இலங்கையரசினைப் பொறுத்தவரை தமிழ் மக்களுடைய போராட்டத்தை தமிழினத்தை வைத்தே அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. அதனை இன்றும் முன்னெடுத்து வருகின்றது. எதிர்க்கட்சிப் பதவியினை வழங்கி தமிழினத்தை விலைக்கு வாங்கலாம் என்கிறவகையில் இவ்வரசு செயற்படுகிறது. பல்வேறு காரணங்களைக்கூறி தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டங்களை வழங்குவதில் அரசு தாமதம் காட்டுகிறது. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தமிழ் மக்களது இனப்பிரச்சினையில் ஆர்வம்காட்டாது தமது சுயநலத்திற்காக தமது அதிகாரங்களை நிலைநாட்டும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றன. ஆசியப்பிராந்தியத்திற்குச் சர்வாதிகாரி என இந்தியாவும், ஐரோப்பிய மற்றும் ஆசியப்பிராந்தியங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென அமெரிக்காவும் செயற்பட்டுவருகின்றன. இலங்கையின் ஆட்சிமாற்றத்திற்கு இந்த இரு நாடுகளும் முக்கிய காரணியாக அமைந்தன.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பதை நிரூபித்துக்காட்டும் வகையில் பாராளுமன்றில் தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்தினை வழங்கியிருக்கின்றோம் என்பதை வெளியுலகிற்குக்காட்டவே அரசாங்கம் அன்பளிப்பாக த.தே.கூட்டமைப்பிற்கு பதவிகளைக்கொடுத்துள்ளது என்றே கூற வேண்டும். ஜெனிவாவில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை பல தமிழ் பிரதிநிதிகள் தைரியமாக எடுத்துரைத்துள்ளனர். இதனைவிட வட மாகாணசபையினாலும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்கிற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கடிதமும் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 06வருடங்களைக் கடந்து 07ம் ஆண்டில் காலடிவைக்கும் நாம் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் இனிமேலும் கிடைக்கும் என எதிர்பார்க்க இயலாது. தேசியம், சுயநிர்ணய உரிமைகள் எனக் கூறிக்கொண்டிருந்த த.தே.கூட்டமைப்பு அதிலிருந்து விலகி அரசோடு ஒத்தவேசம் தரித்துக்கொண்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினால் தமிழ் மக்களிடையே இருந்து த.தே.கூட்டமைப்பு நம்பிக்கை இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசின் நிகழ்ச்சிநிரலின்படி இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதோடு வடகிழக்கு இணையாத ஒரு ஆட்சிக்கட்டமைப்பை உருவாக்கிக்கொடுப்பதே இவர்களது நோக்கமாகவிருக்கிறது. ஆகவே ஜெனீவா அமர்வுகள் என்பது ஒரு பொழுதுபோக்காக அமையுமே தவிர, தமிழ் மக்களுக்கு எந்தவிதத்திலும் பயன்தரக்கூடியதாக அமையாது என்பதை எடுத்துக்காட்டுகிறோம்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

84

அப்போதுதான் நாவற்குழிப் பாலத்தைத்தாண்டி கைதடி நோக்கி வந்து கொண்டிருந்த எமது கொம்பனியின் மருத்துவப் பொறுப்பாளர் மேஜர் முகுந்தினி இதனை அறிந்து கொம்பனியின் ஏனைய மருத்துவ முதலுதவியாளர்களோடு விரைவாக வந்து உயிர் காக்கும் தம் பணியைச் செய்யத்தொடங்கினார். போராளிகளுக்கு எனக்கொண்டு வந்த மருந்துகளைப் பாவித்து மக்களை இயன்றவரை காப்பாற்றினார்.

வியப்பில்லை.

எப்படியேனும் உள்ளே புகவேண்டியிருந்தது. இரகசியமாக இயலும்வரை அருகிற்சென்று பின்னர் தாக்குதலைத் தொடுப்பதாகத் திட்டமிடப்பட்டு, உடனடியாகக் கிடைத்த வேவுத் தகவலின்படி ஒரு பக்கம் மேஜர் வதனியின் அணியும், மறுபக்கம் ஆண் போராளிகளின் ஓர் அணியும் தாக்குவதற்குத் தயாரானது. இராணுவம் பற்றிய தகவல்களை முழுமையாகப் பெறமுடியாத நிலையில்,



பகலும் கழிந்துபோயின.

இந்தப் பகல் வேகமாகக் கழிந்து போய் விடாதா என்ற ஆதங்கத்துடன் அணிகள் தயார்ப்படுத்தப்படுகின்றன.

பின்னர் மக்களனைவரும் எமது போக்குவரவுப் படகுகளில் வன்னிக்கு அனுப்பப்பட்டனர். மக்களை முடிந்தவரை காப்பாற்றிய நிம்மதியில் தம்மிடத்துக்குச்சென்றுகொண்டிருந்த மேஜர் முகுந்தினி பகை வீசிய எறிகணையில் வீரச்சாவடைந்தார்.

இதன்பிறகு நாவற்குழிச் சந்தி ஒருகொலை வலயமாக மாறியது. எந்த நேரமும் எறிகணைகள் வந்துவீழும். குண்டுகளை வீசும். வீதிகள் குழியாகும் அல்லது தமிழ்மக்களின் வியர்வை சிந்திய உழைப்பில் எழுந்த வீடுகள் சிதைந்து நொருங்கும். நாளாந்தம் ஆண்டவனே என்றெம் மக்கள் இறைஞ்சுகின்ற ஆலயச் சுவர்கள் சிதறித்தெறித்து பலநூறு மீற்றர்களுக்கப்பால் பறந்துவீழும். இதுவே இங்கு வாடிக்கையாகிப்போனாலும் கூட, நாவற்குழிச்சந்தி தன் போக்குவரத்து முக்கியத்துவத்தை ஒருபோதும் இழந்துவிடவில்லை.

இப்போது அணிகள் கைதடிப் பிள்ளையார் கோயிலுக்குச் சற்றுப்பின்னே இடதுபுறமாகத் தொடங்கி நெடுஞ்சாலையை ஊடறுத்து, தச்சன் தோப்பு வயல்களூடாகச் சென்று, புகையிரத வீதியையும் தாண்டி, தனங்கிளப்பிலிருந்து சாவகச்சேரிக்குச் செல்லும் வீதியை ஊடறுத்து நின்றது. ஒரு வளைவான வடிவில் நிலைகொண்ட அணிகள் நிலைமைக்கு ஏற்றவகையில் முன்னேறக் காத்திருந்தன. அதே நேரம் கைதடியிலிருந்து கோப்பாய் செல்லும் வீதியின் குறுக்காக செல்வியுடன் சோதியா படையணியின் கொம்பனி படையினரை வரவிடாது மறித்து நின்றது.

நாவற்குழிப் பாலத்தைப்போலவே கைதடிப் பாலமும் சுற்றிவர நீண்ட வெளியைக் கொண்டது. காப்பு மறைப்பு எதுவுமற்று விரிந்து கிடக்கின்ற பரந்தவெளி அது. சிங்களப் படைக்கும் இது பெரியளவில் வாய்ப்பாக இருக்கவில்லை. எனவே கைதடிப் பாலத்துக்கு அப்பால் இருந்த பனங்கூடலைப் பயன்படுத்திக்கொண்டது இராணுவம்.

கிட்டத்தட்ட வீதி நீளமும் பக்கவாட்டாக 400மீ. தூரத்தைக்கொண்ட வெளியைத் தவிர்த்து அப்பாலே அடர்ந்து நீண்டு உயர்ந்திருந்த பனங்கூடல் மிகுந்த பாதுகாப்பைப் படைத்தரப்புக்குக் கொடுத்திருந்தது. அருகில் போனாலே சரசரக்கும் காவோலை. யாரையுமே கிட்ட அண்டவிடாத வடலிகள் என உள்ளே போக முற்படுவோரை உடனேயே இனங்காட்டிவிடும் பனங்கூடல் எமக்குப் பாதகமாய் அமைந்ததில்

அணியிலிருந்த கனரக ஆயுதங்கள் தேவையான இடங்களுக்குச் சூட்டினை வழங்குவதற்குத் தயார்ப்படுத்தப்பட்டன. இருள் புகுந்த மாலை நேரம் இரு புறத்தும் அணிகள் நகரத் தொடங்கின. இவர்களுக்கு உதவியாக கைதடிப் பாலத்துக்கு ஓர் அணி அனுப்பிவைக்கப்பட்டது.

நேரம் இப்போது இரவு 8.30. பாலத்திலிருந்து இருளோடு இருளாகப் புறப்பட்ட அணிகள் மெல்ல மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தன. முன்னே எதுவுமே தெரியவில்லை. எனினும் இருளை ஊடறுத்து விழிகளால் உற்றுத் தேடியபடி நகர முயல, முதுகுப் புறமாக வானில் தேடொளி ஒன்று ஒளிர்கிறது.

அது அரியாலைச் சந்திப்பக்கமாக இருக்கவேணும் மனம் எண்ணிக் கொள்ள, 'இப்ப இந்தப் பக்கம் பரா அடிச்சால்...' நினைத்தவுடனே ஏதோ செய்தது. இந்த எண்ணம் இன்னும் நிதானத்தைத் தர நகர்ந்துகொண்டிருந்தோம். இதோ பனங்கூடல். இதற்குள் வாய் பிளந்திருக்கும் சுடுகலன் முனையுடன் படையினர் எங்கே நிற்கின்றனர்? இன்னும் இன்னும் ஊர்ந்தோம். மிக அண்மையாக, இங்கே இருக்கின்றேன் என்பதுபோல சடசடத்தன படையினரின் சுடுகலன்கள். பதிற் சூடுகள் நடத்தப்பட்டதுடன் பழக்கப்படாத இடம் என்பதால் அணி களையத் தொடங்கிற்று. ஏதாவது பின்னடைவைச் சந்திக்கநேரின் எவ்வாறு, எவ்விடத்தில் சந்திக்கவேண்டும் என்ற திட்டத்துடன்தான் புறப்பட்டிருந்தோம். பரவலாக எல்லா இடத்திலிருந்தும் தாக்கத்தொடங்கினர் படையினர். அவர்களின் சூட்டுவலு அதிகமாக இருந்ததால், புறப்பட்டது போலவே பின்வாங்க முயற்சித்துக் கொண்டிருந்தோம். முன்பு சொன்னபடியே இரகசியமாக, மிக இரகசியமாகப் படையினரின் அண்மையில் இருந்து வெளியேறி வந்துவிட்டோம். கடும் இருள். கைதடி வெளிக்காற்றிலும் மேனி வியர்க்கிறது. ஒருவாறு முழுப்பேரும் வந்து சேர நள்ளிரவு கடந்துவிட்டது. இந்நடவடிக்கைகளில் லெப்.மாலா வீரச்சாவடைய, இன்னொரு போராளி காயமடைந்தார்.

மீண்டும் முன்னேறும்படி கட்டளை கிடைத்தது. இப்போது திட்டத்தில் இன்னும்மாற்றம்நடக்கிறது. ஏற்கனவே முன்னேறியதன் மூலம் படையினர் இருக்கும் இடமும், ஆயுத பலமும் அறிந்துகொள்ளப்பட்டதால், மேலதிக தகவல்கள் திரட்டப்படுகின்றன. அப்பகுதியின் பலம், பலவீனம் என்பன அவதானிக்கப்பட்டு நுணுகி ஆராய்ந்து திட்டம் வகுக்கப்பட, ஒரு இரவும் ஒரு

ஏனைய கனரக ஆயுத ஊர்திகளை அண்மையில் கொண்டுவந்து துல்லியமான சூடுகளை வழங்குவதன் மூலமாகப் படையினரின் முன்னரங்க நிலையை உடைக்கும் தீர்மானத்துடன் இரவிரவாக இரகசியமாக அவை முன்னே கொண்டுவரப்பட்டு, உருமறைக்கப்பட்டன. அணி நகர்த்தல் தொடக்கம் எறிகணை உதவி பெறுதல்வரை அனைத்தும் சரிபார்க்கப்பட்ட நிலையில் பகல்பொழுது இருளைத் தழுவியது. கைதடிப் பகுதி இன்னும் கைப்பற்றப்படாததால் கோயிலாக்கண்டி, தனங்கிளப்புப் பகுதியணிகள் நகராமல் தாமதிக்க வேண்டியதாயிற்று. எனவே மேஜர் தமிழ்செல்வியின் அணி விரைவாக நகர்வதற்குத் தயாரானது.

இதேநேரம் மட்டுவில் பகுதியால் நகர்ந்த அன்பரசி, ஜெயந்தன் படையணிகள், படையினர் மீது தாக்குதலைத் தொடர்ந்தவண்ணம் இருந்தன.

வதனியின் செக்சன் முன்னே இறங்கியது. எதிர்ப்பு அதிகமாக இருந்தபோதிலும் எமது கனரக ஆயுதங்களின் சூட்டுவலு இராணுவத்தின் இருப்பையும், எதிர்ப்பையும் வலுவற்றதாக்கிவிட, உள்ளே புகுந்த தாக்குதலணி அக்காவலரண் வரிசையைக் கைப்பற்றத்தொடங்கியதும், படையினர் பின்வாங்கவேண்டியதாயிற்று. ஏனைய அணிகள் பின்தொடர நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் தாக்குதலுக்கேற்ற தயார்நிலையில் வியூகமமைத்து சாவகச்சேரியைநோக்கி நகரத் தொடங்கினோம். மிகுந்த வேகமாகக் கட்டிடக் காட்டிடையே நகர்ந்து சாவகச்சேரி நகரத்தை அண்மித்துக்கொண்டிருந்தோம். இடையில் நிகழ்ந்த தாக்குதல்களைச் சிறிய அணிகளே முறியடித்துவிட்டிருந்தன.

இப்போது நாங்கள் சாவகச்சேரியின் மையப் பகுதியினுள் கால் வைத்தோம். பழக்கப்பட்ட வீதிகளைக்கூட கண்டுபிடிக்கமுடியவில்லை. வீதிக்கு இடதுபக்கமாக ஒரு எரிபொருள் நிரப்பு நிலையமிருந்தது. அதனை அண்டியதாக இராணுவம் தனது தளம் ஒன்றை அமைத்திருந்தது. அது அந்தப் பகுதியின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்தபோதும், இப்போது அது எமது முற்றுகைக்குள்ளேதான். கிட்டத்தட்ட 40 நிமிடம்வரை நடந்த சண்டையில் படையினர் அழிக்கப்பட, நாம் முன்னே நகரத்தொடங்கினோம். அதிலிருந்து ஒரு 800மீ. தூரம்தான் நகர்ந்திருப்போம்.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 532. | கப்டன் தமிழரசி | சோபா தம்பிராசா | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 533. | கப்டன் பூங்குழலி | பார்வதி தம்பிராசா | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 534. | கப்டன் பாலப்பிரியா | சரோஜா இளையபெருமாள் | திருகோணமலை | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 535. | கப்டன் வானதி/வாழ்க்கை | நித்தியா இராசதுரை | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 536. | கப்டன் உஷா | மாலினி முத்துச்சாமி | திருகோணமலை | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 537. | கப்டன் [illegible] | [illegible] | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 538. | கப்டன் [illegible] | [illegible] | திருகோணமலை | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபையும் அதன் குளறுபடிகளும்



விடுதலைப்புலிகளுடைய தமிழ் ஈழத் தனியரசுக்கான போராட்டம் முப்பது ஆண்டுகளாக நீடித்தமையும் இறுதியாக முள்ளிவாய்க்கால் படுகொலைகளோடு தோல்வியைத் தழுவிக்கொண்டமையுந் தெரிந்ததே.

இத்தோல்வியை விடுதலைப்புலிகள் அமைப்பு எதிர்கொள்வதற்குச் சற்றே முன்னரான காலப்பகுதியில் அவ்வமைப்பானது இடைக்கால நிர்வாகம், பேச்சுவார்த்தை என்னும் நிபந்தனைகளின் கீழ் ரணில் தலைமையிலான ஐ.தே.க அரசில் மோதல் தவிர்ப்புக்கு இணங்கியிருந்தமையோடு, அவ்வமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வேண்டுதலின் பாற்பட்டுத் தமிழ் மக்கள் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச் ஸ்ரீலங்காவின் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் தெரிவுசெய்தமையோடு அக்கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டவர்களை அந்நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்துமிருந்தார்கள்.

இந்தியாவில் ரஜீவ்காந்தி அவர்கள் பிரதமர் பதவி வகித்தபோது, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் அவர்களை அந்நாடானது அழைத்து மாகாணசபைகள் மூலமாக இலங்கையில் அதிகாரங்கள் பகிரப்படுவதையேற்குமாறு வலியுறுத்தி நின்றபோது அவர் முற்றுமுழுதாக அவ்வாறான அதிகாரப் பரவலாக்கலை நிராகரித்துமிருந்தார்.

முள்ளிவாய்க்காலோடு விடுதலைப் புலிகளுடைய ஆயுதப்போராட்டம் மௌனித்தமையால், அதன் பின்னர் வட-கிழக்குத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஆரம்பித்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் ஸ்ரீலங்கா நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் பாதுகாப்பு அரணாக மாகாண சபைகள் விளங்கியமையால் அச்சபைகளின் அதிகாரங்களைத் தாம் கைப்பற்றிக் குளிர்காயும் நோக்கில், ரணில் ஆட்சியதிகாரத்துக்குப் பச்சைக்கொடி காட்டிக்கொண்டே மாகாணசபை அதிகாரத்துக்குள் வடக்கு-கிழக்கு இணைப்பையும், காணி பொலிஸ் அதிகாரங்களையும் வலியுறுத்தி நின்றனர். இதன் காரணமாகத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் மீது அசாதாரண வெறுப்படைந்த நீலக்கட்சி ஆட்சியில் ஜனாதிபதியாக இருந்தவரும், யுத்தத்தை முடித்து வைத்தவர் என்னும் பெருமையை மிக இலகுவாகப் பெற்றுக்கொண்டவருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் காணி-பொலிஸ் அதிகாரம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை, வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி சிந்திக்கலாம் எனவும் கூறியிருந்தார்.

சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றிலுஞ் சரி அதற்கு முன்னருஞ் சரி வடபுலத்தின் அரசியல் தலைமைகள் சிங்கள மேட்டுக் குடியினரின் நலன்சார்ந்த அரசியல் நெறிநின்று தமிழ் மக்க்ளின் உரமைகளை யாசித்து நின்றமை புதுமையான ஒன்றல்ல. சுதந்திரத்துக்கு முன்னரும், சுதந்திரத்தைப் பிரித்தானியர் இலங்கைக்கு வழங்கிய தருணத்திலும் வட பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய சேர்.பொன் இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், சேர்.பொன் மகாதேவா போன்ற தலைவர்கள், போர்த்துக்கேயர் இலங்கையின் மூன்று சிங்கள இராச்சியங்களையும் அதன் பின்னர் இரண்டு தமிழ் இராச்சியங்களையும் கைப்பற்றி இலங்கை முழுவதையும் தமது ஆளுகைக்குள் கொண்டுவர முன்னர் இலங்கையில் தமிழ் இராச்சியங்கள் இருந்தன என்பதை எண்ணிப்பார்க்கத் தவறியமையும், பாரத சுதந்திரப் போராட்டத்தின்போது பாகிஸ்தான் தலைவர் ஜின்னா அவர்களுக்கிருந்த தீர்க்கதரிசனம் அவர்களுக்கு இல்லாமல் இருந்தமையும் மிகவும் துரதிட்டவசமானவொன்று.

சுதந்திரத்தின் பின்னர் தமிழர் அரசியல் உரிமைகள் தொடர்பில் முதலில் குரலெழுப்பிய ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் நாடற்ற மலையகத் தமிழர்களின் குடியுரிமை தொடர்பில் நடந்துகொண்டமுறையொன்றே அன்னார் தமிழர் அரசியல் உரிமைகள் தொடர்பிலான அணுகுமுறைகளைச் சிங்கள மேட்டுக்குடியினரின் பொருளியல் நலன்சார்ந்து நகர்த்தியிருந்தாரென்னும் பேருண்மை புலப்படும்.

இவ்வாறாகவே 1965ஆம் ஆண்டு ஆட்சியமைத்த ஐ.தே.கவின் டட்லி சேனநாயக்க அமைச்சரவையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் செனட் சபை அங்கத்தவராக இருந்த திருச்செல்வம் என்பாரை அக்கட்சியானது அமைச்சராக்கி டட்லி சேனநாயக்க அவர்களின் அமைச்சரவையிலும் இணைத்துக் கொண்டது. இதன் மூலம் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுக்குச் சளைக்காதவராக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும் தமிழர் உரிமைப்போராட்டத்தை வெறும் வாய்ப்பாடாக மட்டுமேகொண்டு சிங்கள மேட்டுக்குடியினரின் நலன் சார்ந்து நின்றார் என்பது வெளிப்படையாகின்றது. இவ்வாட்சியின் போதுதான் இன்று தமிழர் காவலர் எனப் பெரிதாகப் பிதற்றப்படும் முருகேசு சிவசிதம்பரம் அவர்களும் துணைச் சபாநாயகராகவிருந்து குளிர்காய்ந்தார் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டியேயாகவேண்டும்.

இவ்வாறான காலநகர்வில் வல்வையின் ஞானமூர்த்தி அவர்களின் நன்முயற்சியானது நாசமாகிப்போகும் விதமாகவும், வட்டுக்கோட்டையின் தமிழ் ஈழத் தீர்மானம் கேள்விக்குறியாகும் விதமாகவும், 1977இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்ற அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் நடவடிக்கைகளும் அமைந்திருந்ததெனலாம். இறுதியாக இன்று ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவியில் அமர்ந்து குளிர்காய்ந்துகொண்டிருக்கும் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களுடைய நடவடிக்கைகளும் முன்னவர்களுடைய நடவடிக்கைகளுக்குச் சளைத்தவையல்லவெனவே தோன்றுகின்றன.

நிலைமை இவ்வாறிருக்க வடமாகாண சபையில் இன்று இடம்பெற்றுக்கொண்டிருக்கும் குளறுபடிகள் பல்வேறு வகையானவையும், சிக்கல் வாய்ந்தவையாகவுமான தனிநபர் பிரபல்யம், நிதிசேர்ப்பு ஆகியவற்றை மையமாகக்கொண்டு அமைந்திருக்கின்றனவெனலாம். தெளிவாக விளம்பின் மக்கள் நலனுக்கு முற்றிலும் மாறாக மக்கள் பிரதிநிதிகள் என அழைக்கப்படுவோர் நானா? நீயா? இன்றைய கதாநாயகன், எனக்கா? உனக்கா? நாளைய கதாநாயகி, என்னுடைய வங்கிக் கணக்குகளா? உன்னுடைய வங்கிக் கணக்குகளா? பாரம் கூடியவை, என்னுடைய பெயரா? உன்னுடைய பெயரா? ஊடகங்களில் அதிகளவில் வலம் வருவது? என்னும் மிகவும் பெருந்தன்மையோடு இயைந்ததான தனிநபர் காழ்ப்புணர்வோடு இயைந்த போட்டிகளில் ஈடுபடுவதால் வடமாகாண சபை அதிகளவில் குளறுபடிகள் இடம்பெறும் சபையாக உள்ளதெனலாம்.

தமிழர் பேரவையென்னும் அமைப்பின் உருவாக்கம் மூடிய அறையில் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களுக்கெதிராகத் தமிழ்த்தேசியவாதிகளில் ஒரு சாரார் மேற்கொண்ட இரகசிய இயங்கியல் முகாம் ஆகியவை தமிழ் மக்களுக்கு வழங்கும் மகத்தான படிப்பினையென்ன? என்பதை நோக்கின், வடமாகாண சபையின் நிர்வாக அதிகாரமானது அம்மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட மக்கள் நலன் சார்பில் சமநிலை நோக்கில் தனது சேவைகளை முன்னெடுப்பது அசாத்தியமானவொன்றேயென்னும் தெளிவைப்பெறக்கூடியதாகவிருக்கும். இம் மாகாணசபையில் அமைச்சர்களாகவுள்ளோர் தத்தமது வதிவிடஞ் சார்ந்த மாவட்ட மக்களின் நலனின் பாற்பட்டே அதிக அக்கறையெடுத்துச் சேவையாற்றுவதாகவும் பொதுவான குற்றச்சாட்டொன்றும் நிலவிவருகின்றது. இக்குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலுமில்லை. எடுத்துக்காட்டாக அமைச்சர்டெனீஸ்வரன்அவர்கள்மன்னார் மாவட்ட மக்களை மட்டுமே அதிகளவில் இலக்குவைத்துச் சேவையாற்றுவதாகவும் அவர் மீது தனிப்பட்ட முறையில் பொறுத்த குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டிருப்பதோடு, அதிருப்தியும்வெளியிடப்பட்டிருக்கின்றது. ஓர் அமைச்சரோ அல்லது பொதுவாழ்விலுள்ள வேறு எவருமோ தான் சார்ந்த பிரதேசத்தில் அதிகளவு அக்கறை செலுத்துவது இயல்பானவொன்றாகவிருந்தபோதுங்கூட தான் சாராத பிரதேசத்தவர்கள் அசாதாரண அதிருப்தியடையக்கூடிய நிலையில் மக்கள் நலத்திட்டங்களை மேற்கொள்வது உகந்ததல்ல. இன்னுங்கூறப்போனால் தான் சாராத பிரதேசத்தவர்கள் மீது காட்டுங் கரிசனை ஒருவகையில் சொந்தப் பிரதேசத்தவர்களின் பாராட்டையும் பெறக்கூடிய மனோவியல் சார்ந்த நிலையொன்றையுங் கூடத் தோற்றுவிக்கலாம். எனவே வடமாகாண் சபையின் குளறுபடிக்கான காரணிகளிலொன்றான பிரதேச ரீதியாக வேறுபாடு காட்டும் இயல்பு இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

மேலும் வடமாகாணசபையின் அமைச்சர்கள் பொதுநலத் திட்டத்துக்காக ஒதுக்கப்படும்பணத்தில்பெருந்தொகையைத் தமதும் தம்முடைய குடும்பங்களது தேவைகளுக்காகவும், சொகுசு வாழ்வுக்காகவும் சூறையாடுவதாகவும் இவ்விடயத்தினால் மேலெழும் போட்டி, பொறாமை ஆகியவை அம்மாகாண சபையின் அமைச்சர்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் குறைகூறிக்கொண்டு தான் தான் தப்பிக்கொள்ளும் நிலைமையைத் தோற்றுவிப்பதாகவும் பரவலான ஒரு குற்றச்சாட்டும் நிலவுகின்றது. இக்குற்றச்சாட்டில் உண்மையில்லாமலுமில்லை. எனவே வடமாகாண அமைச்சர்கள் பொதுநிதியைத் தாம் கையாடித் தப்பிக்கொள்ளும் முகமாக ஒருவரையொருவர் சாடி அச்சபைக்குள் தோற்றுவிக்கும் குளறுபடிகள் முன்னணியிலுள்ளனவெனலாம்.

மேலும் வடமாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், ஏனைய மக்கள் நல நடவடிக்கைகள் சார்பாகவும் அம்மாகாண சபைக்குள் மத்திய அரசின் (கொழும்பு) தலையீடுகளும், உள்ளீடுகளும் இடம்பெற்றுக்கொண்டிருப்பதும் வழமையானவொன்றே.

தமிழ்த்தேசியத்தின் பெயரால் வடமாகாண சபையைத் தமது ஆதிக்கத்துக்குள் ஆட்படுத்திக்கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பார் இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதும் அதிக ஆசனங்களை அரவணைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா தேசத்தின் எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவியையும் தமதாக்கிக்கொண்டனர். இப்பதவியளித்த கிறக்கத்தில் பதவியை அலங்கரித்துக்கொண்டிருக்கும் திருமலை சம்பந்தன் அவர்களும் விடுதலைப் புலிகளுடைய தமிழ் ஈழக் கோரிக்கையைத் தாம் கைவிட்டுவிட்டதாகவும், தாம் தற்போது சமஷ்டிக் கோரிக்கையையே வலியுறுத்துவதாகவும் திருவாய் மலர்ந்தருளியிருந்தார்.

1949ஆம் ஆண்டு அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியானது இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகள் சமஷ்டி ஆட்சிமுறையின் கீழ் பேணப்படும் என நம்பிக்கை கொண்டு பல ஆண்டுகள் தொடர்ச்சியாக அக்கோரிக்கையை வலியுறுத்தி உழைத்தபோதும் அக்கோரிக்கையை வென்றெடுப்பது அசாத்தியமானதொன்றாகவே தென்பட்டது. இதன் விளைவாகத் தனித் தமிழ் ஈழக்கோரிக்கை பின்னாளில் தமிழ் மக்களுக்குள் வெகுஜனத் தெரிவாக அமைந்துமிருந்தது. அப்படிப்பட்ட ஓர் அரசியல் தெரிவைத் தனியொரு சம்பந்தன் அவர்கள் கைவிடுவதாகத் தெரிவிப்பது அவரும் அவருடைய சகாக்களும் பேசும் புதிய தமிழ்த்தேசியம், பழையவர்கள் மொழிந்த தமிழ்த்தேசியத்தைவிடவே மிகவும் மலினமானதும் வலுவான போலித்தன்மையுடையதாகவே கருதப்பட வேண்டும். இவ்வாறாகத் தமிழ்த்தேசியம் அரசியல் ரீதியாக சிதைக்கப்படும்போது, வடமாகாண சபையில் கொழும்பு மத்திய அரசின் தலையீடுகள் அவ்வரசு சார்ந்த அமைச்சர்களும் ஆதரவாளர்களும் வடக்கிலும் இருப்பதால் இடம்பெறுவது இயல்பானதே. இம் மாகாணசபையின் வேலைத்திட்டங்களும், ஏனைய இன்னோரன்ன விடயங்களும் சுவாமிநாதன், விஜயகலா போன்ற மத்திய அமைச்சர்கள் மூலமாகவும் ஏனைய அரச பிரமுகர்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்படும் அழுத்தங்களினால் சோர்வுற்ற நிலையில் குளறுபடிகளுக்காளாவதும் சபையின் குழப்ப நகர்வுகளுக்கான மேலும் ஒரு பிரதான அம்சமாகும்.

எனவே வடமாகாண சபையினது குளறுபடிகளற்ற மக்கள் நலனோம்பும் சபையாக விளங்கவேண்டுமெனின் அச்சபையிலுள்ள தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்கள் உள்ளடங்கலான பிரதிநிதிகள் நிதி மோசடிகள், சூறையாடல்களில் ஈடுபடுவதையும், தனிநபர் பிரபல்யத்தில் நாட்டங்கொள்வதையும், தனிநபர் காழ்ப்புணர்வையும் முற்றுமுழுதாகத் தவிர்த்துக்கொள்வதொன்றே உறுதுணையாகவிருக்கும். அத்தோடு மத்திய அரசானது தனது அமைச்சர்கள் மூலமாகவும், ஏனைய பிரமுகர்கள் வாயிலாகவும் வடமாகாண சபையில் தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிப்பதையும் நிறுத்திக்கொள்வது இம்மாகாண சபையின் குளறுபடிகளற்ற நகர்வுக்கு மேலும் வலுச்சேர்க்குமொன்றாகவுமிருக்கும்.

**வீரப்பதி விநோதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கை அரசியலில் மூக்கை நுழைப்பது ஏன்?



மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இலங்கை ஜனாதிபதியாகவிருந்தபோது அவரது சீன சார்பு நிலைப்பாடு இந்தியாவுக்கும். அமெரிக்காவுக்கும் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. அதனால் அவரின் ஆட்சிக்காலத்தின்போது இந்நாடுகள் குறிப்பாக அமெரிக்காவானது இலங்கைக்கு அளிக்கும் பொருளாதார உதவிகளில் வலிந்து தடைகளையேற்படுத்தி நெருக்குவாரத்தைக் கொடுத்திருந்தது.

தற்போதைய மைத்திரி. ரணில் ஆட்சியில் அமெரிக்க சார்புப்போக்கு இருப்பதனாலும். இந்தியாவுடனான நட்புறவு மேலோங்கியிருப்பதாலும் சீனாவினது இவ்வாட்சியின் மீது குரோதங்கொண்ட தேசமாக விளங்குகின்றது.

அண்மையில் இடம்பெற்ற தமிழக சட்டசபைத் தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிடர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றமை. பழம்பெரும் திராவிட தமிழர் உரிமைக் காவலரான கலைஞர் கருணாநிதி அவர்கள் தோல்வியைத் தழுவியளவில் இலங்கையரசுக்குச் சற்று ஆறுதலேயெனலாம்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் திமுக அடைந்த தோல்வியின் நிமித்தம் இந்திய மத்திய அரசோடு. கலைஞரின் ஆட்சியில் தமிழகம் இருக்கும்போது தாம் நட்புடன் உறவாடுவதைவிட இறுக்கமான நிலையில் அம்மத்திய அரசோடு உறவாடலாம் என்னும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மையமாகக்கொண்டு எழுந்த இலங்கை அரசின் இறுமாப்பு வெளிப்பட ஆரம்பித்துள்ளது. இதை ஆதார சக்தியாக வைத்து இந்தியாவுடன் இலங்கையானது தனது நட்புறவை வலுப்படுத்த முயலும்போது பதிலுக்கு இந்தியாவும் பிரதானமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் அக்கறை கொள்வதாக நடித்து இலங்கையில் தனது பொருளியல் வளத்தை அதிகரிக்கும் நோக்கில் மூக்கை மூர்க்கமாக நுழைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கனவே இவ்விந்திய தேசமானது வீட்டுத் திட்டம் போன்ற இன்னோரன்ன திட்டங்களினால் இலங்கைத் தீவில் மூக்கை நுழைத்து மோப்பம் பார்க்க ஆரம்பித்திருந்தது. எனவே இறுதியாக இடம்பெற்ற தமிழக சட்டசபைத் தேர்தலில் கருணாநிதி தோற்று ஜெயலலிதா . மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்றமையானது பாரத நடுவண் அரசுக்கு இலங்கையின் மீதான மேலாதிக்கத்துக்கும் அதன் நிலவிஸ்தரிப்புவாதத்துக்கும் பெரும் உறுதுணையாகவே அமைந்துள்ளதெனலாம்.

மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய ஆட்சிக்காலப் பகுதியில் அவரது சீன சார்புப் போக்கினால் அந்நாடானது இலங்கை தேசத்தில் தனது பொருளியல் தேவை களை நிறைவேற்றுவதில் முன்னணி வகித்திருந்தது. இதன் காரணத்தால் அமெரிக்காவுக்கு அக்காலப்பகுதியில் தனது நலனை இலங்கையில் நிலைநாட்டுவதில் கடினமான நிலையே காணப்பட்டது. எனினும் இந்தியா யுத்தத்தை முறியடிப்பதற்கு இலங்கைக்கு உதவிய காரணத்தால், பல்வேறு வழிகளிலும் தீவின்மீது தனது கழுகுக் கண்களைப் பாய்ச்சி நலனோம்புவதற்கும் மூக்கை நுழைத்து மோப்பமிட்டு நறுமணம் நுகர்வதற்கும் வாய்ப்பான நிலையே அமைந்திருந்ததெனலாம்.

அக்காலப் பகுதியில் இலங்கையின் மீதான அமெரிக்காவின் மூக்கை நுழைத்தல் வலுக்குன்றிய நிலையில் இருந்தபோதுங்கூட அந்நாடும் இலங்கையை முகர்ந்து பார்க்கும் மூர்க்கத்தனத்தைத் தவிர்த்துக் கொள்ளவில்லை.

இவ்வாறாக இலங்கையின் ஆட்சி மாற்றங்களுக்கு அமைவாக அமெரிக்கா. சீனா. இந்தியா போன்ற நாடுகளின் இலங்கை தொடர்பிலான நிலைப்பாடுகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றபோதும் பொதுவில் இந்நாடுகள் இலங்கையின் பொருளாதார வங்குரோத்து நிலையை அவதானித்து அதை நிவர்த்தி செய்வதற்குக் கடன் வழங்கி நாட்டைத் தமக்குக் கடனாளியாக்கி அக்கடனை இலங்கையினால் திருப்பிச்செலுத்த முடியாத நிலையில் அதைத் தமது கைப்பொம்மையாக ஆக்குவதே இந்நாடுகளின் தலையாய உள்ளார்ந்தமாகும்.

மஹிந்த காலப்பகுதியில் அவருக்கிருந்த சீன சார்பு சுபாவம் அமெரிக்காவுக்கு இலங்கைமீது ஆத்திர மூட்டியதைப்போலவே தற்போதைய மைத்திரி-ரணில் அரசுக்கு இருக்கும் அமெரிக்க நலன் சார்ந்த இயல்பு இந்த அரசாங்கத்தின் மீது சீனாவுக்கு ஆத்திரித்தை வரவழைத்துள்ளதெனலாம். ஆனால் பாரத தேசமானது இவ்விரண்டு அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்தின்போதும் வெவ்வேறு வகையான பிராந்திய நலன்களின்பாற்பட்டு சில வேளைகளில் முரண்பட்டு நின்று மோதுவதையும். இன்னும் சில வேளைகளில் நட்புறவு பாராட்டுவதையும் வழக்கமாகக்கொண்டுள்ளது. மேலும் இந்திய நாட்டில் தமிழ்நாடு மாநிலம் அமைந்திருப்பதோடு இலங்கைத் தமிழர் பிரச்சினை இம்மாநிலத்தின் அரசியலில் மிகுதியாகப் பேசப்படுமொன்றாகவும் அசாதாரண அக்கறையோடுஇயைந்தவொன்றாகவும் காணப்படுவதால், இலங்கைத் தமிழர் பிரச்சினையை மையமாகக்கொண்டும் அந்நாடானது இலங்கைத் தீவின்மீது தனது மேலாதிக்கத்தைச் செலுத்துவதில் தமிழக அரசியல் அழுத்தத்துக்கு தாக்குப்பிடித்தும் அங்குள்ள அரசியல் கட்சிகளினதும், அரசியல் தலைவர்களினதும் பலங்கள், பலவீனங்கள் என்பவற்றை நாடி பிடித்துப்பார்த்தும் தனது இராஜதந்திரக் காய்களைத் தொடர்ச்சியாக நகர்த்தி வந்திருக்கின்றது. தற்போதும் தொடர்ச்சியாக நகர்த்திக் கொண்டிருக்கின்றது. இந்திய மத்திய அரசு இலங்கை மீதான தனது மேலாதிக்கத்துக்குக் குறிப்பாக இந்திய நில விஸ்தரிப்புவாதத்துக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையில், மலையகத் தமிழர் பிரச்சினையை அதிகளவு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றதெனலாம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை உக்கிரமடைந்து தனிநாடு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டதோடு அக்கோரிக்கையை வென்றெடுப்பதற்கான ஆயுதப்போராட்டமும் ஆரம்பமான நிலையில் இந்நாடுகள் மிகவும் எச்சரிக்கையோடும். தீர்க்க தரிசனத்தோடும் இலங்கை மீது மூக்கை நுழைத்தனவெனலாம்.

அமெரிக்க தேசமானது இலங்கை தமிழ் மக்களது விடுதலை இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் அமைப்பையும் அகிலந்தழுவிய பயங்கரவாத அமைப்புக்களெனத்தன்னால் பட்டியலில் இணைத்துக்கொண்டதன் மூலம் உலகில் இடம்பெறும் சகல அடக்குமுறைகளுக்கும். ஒடுக்குமுறைகளுக்கும் சார்புத் தன்மையையும்பகிரங்கப்படுத்திநின்றது. எனினும் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரான காலப்பகுதியில் அம்மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் அம்மக்களுக்குள் அவர்களின் பேரபிமானத்துடன் இயங்கிய அரசியல் கட்சிகளின் சர்வதேச அரசியல் சுபாவத்தைத் தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தை நசுக்கி அழிக்கும் தனது திட்டத்துக்குக் கச்சிதமாகப் பயன்படுத்திக்கொண்டது. இதன் பெறுபேறாகத்தான் அமெரிக்க தேசமானது 1977இல் ஆட்சிபீடமேறிய ஜே.ஆர்.பிரேமதாஷ அரசாங்க காலப்பகுதியின்போது ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்று தமிழ் மக்கள் வழங்கிய தமிழ் ஈழம் என்னும் ஆணையைச் சிறிதும் தயங்காமல் துஷ்பிரயோகம் செய்த அமிர்தலிங்கம் அவர்களைப் பிரதமர் பிரேமதாஷவோடு இணைத்து ஆயுதப்போராட்டத்தை நசுக்குவதற்கு ஆரம்ப வித்திட்டது. இவ்வித்தை அமெரிக்காவானது நீரூற்றிப் பசளையிட்டுப் பெருவிருட்சமாக வளர்த்தெடுத்ததன் பெறுபேறாக வடபுலத்தில் விடுதலை நாடி ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருசாரார் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இணைந்து பணியாற்றவேண்டிய துர்ப்பாக்கியமான நிலையொன்றும் தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்கத் தலைவர்கள் ஸ்ரீலங்காவின் ரணசிங்க பிரேமதாஷ. தமிழ் ஈழத்தின் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஆகியோரின் சர்வதேச வர்க்க நலனை மையமாகவைத்து நகர்த்திய இராஜதந்திரக் காய்கள் தமிழினம் விடுதலை பெறுவதற்கான காலப்பகுதியை மேலும் பல தசாப்தங்கள் பின்னகர்த்தியுள்ளனவென்பதே நல்லோரைத் துன்புறுத்தியுள்ள பேருண்மையாகும்.

இக்காய் நகர்த்தலின் மகத்தான வெற்றியில் இலங்கையின் பெருஞ்சாபக்கேடாகவும் நீண்டகாலமாக இழுபறிப்பட்டவருவதுமான தேசிய சிறுபான்மையினப் பிரச்சினையானது தொடர்ந்தும் இழுபறிப்படும்போது அவ்விழுபறிக்குள் மூக்கை நுழைத்து இனப் பிரச்சினையைப் பிரச்சினையாகவே தொடர்ந்தும் தக்கவைத்து அத்தக்கவைப்புக்கள் மூலமாகத் தனது மேலாதிக்கத்தைச் செலுத்தி இலங்கையைத் தன்னுடைய கைப்பொம்மையாக ஆக்குவதே அமெரிக்கா. இந்தியா. சீனா போன்ற வல்லாதிக்க நாடுகளின் நயவஞ்சகத் திட்டமெனலாம்.

இந்நயவஞ்சகத் திட்டத்தின் அம்சங்களாகவே அமெரிக்காவிலிருந்து இராஜதந்திரிகள் அடிக்கடி இலங்கைக்கு வந்து அரச தலைவர்களைச் சந்தித்துவிட்டுச் செல்வதுடன் மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் வடக்கிற்கும் வந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான விக்னேஸ்வரன். சம்பந்தன் போன்றவர்களையும் எவ்வித பாகுபாடுமில்லாமல் சந்தித்துவிட்டுச் செல்வதையும். இந்தியாவின் வீட்டுத்திட்டம் போன்ற இன்னோரன்ன திட்டங்களையும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின்போது சீனக் கப்பல்கள் அடிக்கடி இலங்கைக்குள் வந்தமையையும் கொள்ளமுடியும்.

**கருணைக்கண்ணன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் அதிகரித்துவரும் பாலியல் தொழிலுக்கு அரசின் திட்டமிடப்பட்ட தூண்டுதல் காரணமாகுமா?

தற்போது யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் வழிப்பறி. கொள்ளை. விபச்சாரம். ஆகிய ஈனச்செயல்கள் பெருமளவில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

மிக நீண்டகாலமாக நல்லொழுக்கம். பண்பாடு. குடும்ப ஒழுங்கு. பரஸ்பரம் அன்போடும் அனுசரணையோடும் இயைந்த வாழ்வுக்கும். அமைதிக்கும் இலங்கை முழுவதற்கும் மட்டுமல்லாமல் உலகத்துக்கே எடுத்துக்காட்டாக விளங்கிய யாழ்ப்பாணம். ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதுகளில் ஆரம்பமாகித் தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக நீடித்த ஆயுதப்போராட்டத்தின்போது முன்னரைவிட சகலவகையிலும் சிறப்புறப் பிரகாசித்தமை யாவரும் அறிந்ததே.

ஆயுதப்போராட்டத்தின் பெறுபேறாகத் தனித்தமிழ்நாடு அமைந்திருப்பின் யாழ்ப்பாணத்தின் மகிமை சொற்களால் வரையறுக்க முடியாதவொன்றாகத் தற்போது அமைந்திருக்குமெனவும் ஆனால் துரதிட்டவசமாக ஆயுதப்போராட்டத்தின் தோல்வியினால் உருவான அப்பிரதேச வாலிபர்களினதும். யுவதிகளினதும் விரக்தியும். வேதனையும். ஏமாற்றமும். தோல்வியும். வேலைவாய்ப்பினையும். சகல வகைகளிலான பொருளியல் நெருக்கடிகளும். பற்றாக்குறைகளும் முன்னெடுப்போதையும்விட அப் பிரதேசத்தில் குற்றச்செயல்களும். வன்முறைகளும். பாலியல் தொழில்களும். சகல வகைகளிலான அசிங்கமான நிகழ்வுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றமைக்குக் காரணிகளாக அமைந்துவிட்டன எனலாம்.

இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்றுக்கொண்டிருப்பதற்கு அம் மாவட்டத்தில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற பொலிசாரும் உறுதுணையாகவிருக்கின்றார்களா? என ஐயுறவேண்டியகள அமைவும் பிரதேசத்தில் வேருன்றியுள்ளது.

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின் அம்மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலைகொண்டுள்ள இராணுவமும் யாழ்ப்பாணத்தின் இவ்வாறான அவல நிலையைக் கருத்திற்கெடுக்காது வாளாவிருப்பதாகவும் தெரிகின்றது.

வாள்வெட்டுச் சம்பவங்களோடு தொடர்புடைய சில நபர்கள் ஆபாச-புளூ பிலிம் பிரியர்கள். பாலியல் வன்முறையாளர்கள் அவ்வவ்போது ஆங்காங்கே பொலிசாரால் கைது செய்யப்பட்டாலுங்கூட பொலிசாரின் இவ்வாறான கைது நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்புத்தானா? எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

புங்குடுதீவு வன்புணர்வு உள்ளடங்கலான சகல குற்றச்செயல்கள் தொடர்பிலும் பொலிசாரினதும். நீதி நிர்வாகத்தினதும் நடவடிக்கைகள் சோர்வான போக்கைக் கொண்டவையாகவே தென்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இவ்வாறான நிகழ்வுகள் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களிலும் இடம்பெற்றால் நீதி நிர்வாகமும். காவல்துறையும் எவ்வாறான வகிபாகத்தைக் கொண்டிருக்குமென்பதையும். இவ்வாறான நடவடிக்கைகளையிட்டு வெகுஜனத் திரட்சி வாளாவிருக்கும் கள அமைவு அப்பிரதேசங்களில் உள்ளதா? எனவும் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

முன்னாள் புலிப்போராளிகள் சிலர் இராணுவத்தினருடன் இணைந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. கடந்த சில வருடங்களின் முன்னர் சங்கானையில் இடம்பெற்ற ஐயர் ஒருவர் வீட்டுக்கொள்ளையும். அவர் அக்கொள்ளை இடம்பெற்றபோது கொலை செய்யப்பட்டமையும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் கசிந்த விடயங்களும் இவ்விடயத்துக்குச்சான்று பகர்வதாக அமைந்திருந்தன. அதாவது அக்கொள்ளையிலும் ஈடுபட்டவர்கள் சிலர் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களெனவும் அவர்கள் கொள்ளையின்போது கையாண்ட துப்பாக்கிகள் இராணுவத்தினரிடமிருந்து வாங்கப்பட்டிருந்தனவென்பதும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்



குற்றச்செயல்கள் அனைத்திலும் இப் பின்னணியுள்ளதாகவோ முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது பொதுவாகக் குற்றஞ் சுமத்துவதோ இதன் பொருளாகாதெனவும் இவ்விடத்தில் இடித்துரைக்கவும் விரும்புகின்றோம்.

எனினும் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தின் இளையோர் விரக்தியின் விளிம்பில் சீவனோபாயத் தேவைகள் நாடி சில வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்டதைக் கண்ணுற்ற இலங்கை அரச தரப்பினர் அம்மாவட்டத்தின் பண்பாடு கல்வி. கலாச்சார விழுமியங்கள் ஆகியன சீரழிவதற்கும் பொருளியல் கட்டுமானங்கள் பலங்குன்றுவதற்கும் இந்நிலை நீடிப்பதை விரும்பிக்கொண்டதோடு யாழ் மாவட்டத்தில் கடமையிலுள்ள பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறான நிகழ்வுகளைப் பெரிதாகக் கண்டு கொள்ளாமலும். தண்டனைகள் தொடர்பில் நழுவல் போக்குகளைக் கடைப்பிடிக்குமாறும் மறைமுக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றார்களெனவும் எண்ண முடிகின்றது.

பெண்களின் பாலியல் சார்ந்த ஒழுக்க விழுமியங்கள் யாழ்ப்பாணத்தில் மேலோங்கியிருந்தமை அம்மாவட்டத்துக்கேயுரிய தனிச் சிறப்பென்பதை யாவரும் அறிவர். திருமணம் தொடக்கம். குடும்ப நகர்வு இடையிட்டுத் தமது பிள்ளைகளுக்குத் மட்டுமல்ல. பேரப்பிள்ளைகளுக்கே திருமணம் செய்து சீர்பெற வாழவைத்த யாழ்ப்பாணப் பெண்மை. கேவலம் இன்று பணத்துக்கும். பகட்டுக்கும். படாடோபத்துக்குமாக பாலியல் தொழிலைச் சிறிதளவேனும் மனக்கூச்சம் இல்லாமல் மேற்கொள்ளுமளவுக்குக் கீழிறங்கியுள்ளது.

இவ்வாறாகக் கேவலப்பட்டும். அசிங்கப்பட்டும். அலங்கோலப்பட்டும் போயுள்ள யாழ்ப்பாணப் பெண்மையை பழைய நிலைக்குக்கொண்டு வருவதற்குரிய அதிகாரபலம் கொழும்பு அரசினருக்கு மட்டுமேயுண்டு. ஆனால் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் சீரழிவிலும். அதன் நலிவிலும் மட்டுமே தணியாத தாகம் உள்ளதால் அங்கு கேவலப்பட்டுப்போன பெண்மையைத் தூய்மைப்படுத்துவதற்குப் பதிலாக மேலும். மேலும் கேவலப்படுவதற்குரியதான மறைமுக நகர்வுகளையே மேற்கொண்டு வருவதாகவுந் தெரிகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் பாலியல் வன்முறைகளை அகற்றுவதற்கு அம்மாவட்டத்தில் கடமையிலிருக்கும் பொலிசாரை நெருக்குவதற்குப் பதிலாக அவர்களை அத்தொழில் தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் இருக்குமாறும். கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தளர்வான போக்கைக் கடைப்பிடிக்குமாறுமே கொழும்பு அரசானது மறைமுக அழுத்தத்தைப் பிரயோகித்து வருவதாகவுந் தெரிகின்றது.

இதனால் நாளாந்தம் அதிகரித்துவரும் வழிப்பறி. கொள்ளை. வாள்வெட்டுச் சம்பவங்கள். ஆபாச ஊடக நுகர்வு ஆகிய காரணிகளினால் களங்கப்படுத்தப்பட்டுப்போயுள்ள புனிதங்காத்த யாழ்ப்பாண மண் தனது தனித்துவமான பெருமையை முற்றுமுழுதாக இழந்து எதிர்காலத்தில் சீரழிவுகள் பெருமளவில் இடம்பெறும் சீரழிந்த மண்ணாகவே நிலை பெறுமெனலாம்.

எனவே யாழ்ப்பாணத்தைச் சீரழித்துக்கொண்டிருக்கின்ற திருட்டுச் சம்பவங்களையும். வன்முறைகளையும் கட்டுப்படுத்தி அவற்றை இல்லாதொழிக்க வேண்டிய கொழும்பு ஆட்சியாளர் கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க முன்வராதது மட்டுமல்ல யாழ் மாவட்டத்தில் கடமையிலிருந்த பொலிஸார் மீது மறைமுக அழுத்தத்தைப் பிரயோகித்து அவற்றை வளர்த்தும் விட்டிருக்கின்றார்கள்.

அதுபோலவே தற்போது அம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் பாலியல் தொழில் விடயத்திலும் கண்டுகொள்ளாத இயல்போடு கொழும்பு அரசினர் இருப்பது மட்டுமல்ல. யாழ்ப்பாணம் எக்கேடு கெட்டுப்போனால் தான் நமக்கென்ன? என்னும் புறக்கணிப்பு மனோபாவமும் அவ்வரசாங்கத்துக்கு இருப்பதனால் கடமையில் அமர்த்தியுள்ள தமது யாழ்ப்பாணக் காவற்றுறையினரின் கடமைக்கே ஊறுவிளைவிக்கும் விதமாக. தற்போது அம் மாவட்டத்தில் அதிகரித்துவரும் பாலியல் தொழில் விடயத்திலும் அசமந்தப் போக்கையே மேற்படி அரசாங்கம் கடைப்பிடித்துவருவது மட்டுமல்ல அத்தொழிலை இல்லாதொழிப்பதற்கான காவற்றுறையினரின் கண்காணிப்பையும் கட்டுப்படுத்தியே வருவது மட்டுமல்ல. அத்தொழிலானது யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் வளர்ச்சி பெறுவதற்கான உறுதுணையாளர்களாக அவர்கள் இருப்பதற்கான மறைமுக அழுத்தத்தைப் பிரயோகித்து வருவதாகவும் தெரிகின்றது.

போகிற போக்கைப் பார்த்தால் இந்தியாவின் பம்பாய். கல்கத்தா ஆகிய மாநிலங்களைப்போல விபச்சாரிகளுக்கான தொழிற்சங்கமும் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்படுவதற்கும் இலங்கையரசே உறுதுணையாகவிருக்கும் போலத் தோன்றுகின்றது.

இவ்விடயந் தொடர்பில் தமிழ்த்தேசியம் பேசுவோரும். முற்போக்கு முகமூடிகளும். அரச அடிவருடிகளும் எவ்வாறாகக் காய்நகர்த்தப் போகின்றார்கள்? வெறுமனே அரசின் காய் நகர்த்தல்களுக்குப் பதிலீடான போலி நகர்த்தலாகவிருக்கக்கூடாதென்பது தான் நல்லோரின் ஆதங்கமாகும்.

**ஐந்நூற்றுவான் ஐங்கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஸ்கம ஆயுதக்கிடங்கு வெடிப்புச் சம்பவத்தின் பின்னணி என்ன?



கடந்தவாரத்தொடர்ச்சி...

வவுனியாவில் அமைந்துள்ள ஜோசப் படைமுகாமானது 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் தாக்குதலுக்குள்ளானபோது அந்த முகாமின் ஆயுதக்களஞ்சியசாலை வெடித்துச் சிதறியது. இதனால் மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர். பலர் வெளியேறினர். ஆயுதக்களஞ்சியசாலைகள் மக்கள் சூழ்ந்திருக்கும் பிரதேசங்களுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வெடித்துச்சிதறுமாகவிருந்தால் அப்பிரதேசவாழ் மக்களின் நிலைமை கவலைக்கிடமாகும். எனவே ஜோசப் படைமுகாமின் ஆயுதக்களஞ்சியசாலை பிறிதொரு பிரதேசத்திற்கு மாற்றப்படவேண்டும். மக்கள் குடியிருப்பை அண்டிய பிரதேசங்களை இராணுவ ஆயுதக்களஞ்சியங்களாகப் பயன்படுத்துவதென்பது அறிவற்ற செயல் என்பதற்கு சலாவ சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டு. கொஸ்கம இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 50இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒருசில விடயங்களை இராணுவம் வெளியிடவில்லை எனவும் இதில் பல மர்மங்கள் மறைந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 06 கிலோமீற்றரைச் சுற்றியுள்ள மக்கள் வெளியேற்றப்பட்டிருந்த நிலையில் இதனது தாக்கம் எவ்வாறிருந்திருக்கும் என்பதை உணரமுடிகிறது. இம்முகாமிற்குள் என்ன வகையான ஆயுதங்கள். வெடிபொருட்கள் இருந்தன. இவ்வெடிவிபத்துக்கான காரணம் என்ன? இதன் மூலம் எவ்வளவு பணம் இழக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

சலாவ ஆயுதக்கிடங்கு வெடிப்பு வெறும் உள்ளக விபத்தா? அல்லது அவ்விபத்தின் பின்னணியில் சர்வதேச அரசியல் வலைப்பின்னல் இருந்துள்ளதா? என்னும் ஐயப்பாடு தற்போது எழுந்துள்ளது.

இவ்வாறானதொரு ஐயப்பாடு தற்போது எழுந்துள்ளமைக்கு மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர் உதய கம்மன்பில அவர்கள் தெரிவித்துள்ள கருத்தும் வலுச்சேர்ப்பதாகவே அமைந்திருக்கின்றது. அன்னாரால் தெரிவிக்கப்பட்ட கருத்து கீழ்வருமாறு அமைந்திருக்கின்றது. இலங்கையில் சன அடர்த்தி. குறைந்த மாகாணமாக வடக்கு இருக்கின்றது. எனவே அங்குதான் இராணுவ முகாம்கள். ஆயுதக்களஞ்சியசாலைகள் அமைக்கப்பட முடியும். அதனால் ஓர் இராணுவ முகாமையோ. ஓர் இராணுவச் சிப்பாயையோ வடக்கிலிருந்து அகற்றக்கூடாது.

உதய கம்மன்பில அவர்களுடைய இக்கருத்து சலாவ ஆயுதக்கிடங்கு வெடிப்போடு சம்பந்தப்படாதவொன்றாக அக்கருத்தை மேலோட்டமாக நோக்கும்போது தோன்றியபோதும் உதய கம்மன்பில அவர்கள் மஹிந்த ஆதரவு அணி உறுப்பினராகவுள்ள நிலையில் மேற்றரப்பட்ட கருத்தைக் கூறியிருப்பதும் சீனாவுக்குத் திருப்பி அனுப்பப்படவிருந்ததான அந்நாட்டிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு யுத்தத்தின்போது பயன்படுத்தப்பட்டவை தவிர்ந்த எஞ்சியிருந்த வெடிபொருட்களே சலாவ ஆயுதக்கிடங்கு வெடிப்பின்போது வெடித்து நாசமாகின என்ற செய்தியும் அவ்வாயுதக்கிடங்கில் இடம்பெற்ற வெடிப்புவெறும் உள்ளக விபத்தின் காரணமாக இடம்பெற்ற ஒன்றாக இருக்கமுடியாது என்னும் சந்தேகத்தையே தோற்றுவிக்கக்கூடியதாகவுள்ளது.

போரின்போதுமஹிந்தஅரசாங்கத்தினால் சீனாவிலிருந்துபெருமளவுவெடிபொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு பகுதி விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியவை சலாவ இராணுவ முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வெஞ்சிய வெடிபொருட்களே தற்போது வெடித்துச் சிதறிச் சின்னாபின்னமாகி வீணாகிப்போயிருக்கின்றன. வெடிபொருட்களைக்கொள்வனவுசெய்தசீனாவிடமே யுத்தத்தில் உபயோகப்பட்டவைபோக மிகுதியாக இருந்தவையை விற்பனை செய்வதற்குத் தற்போதைய மைத்திரி-ரணில் அரசு திட்டமிட்டிருந்தமை தெரியவருகின்றது.

சீனாவின் நொறிங்கோ நிறுவனம் இந்த வெடிபொருட்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியிருந்தது. அது பற்றிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான இந்நிறுவனத்தின் இலங்கைக்கான பயணமும் இடம்பெற்றிருந்தது.

லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னோலொஜிஸ் நிறுவனத்தின் ஊடாக 150 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை விற்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்குக் கடந்த 07.06.2016இல் அமைச்சரவை அனுமதியளித்திருந்தது. அதற்கிடையில் தீ விபத்தினால் இவ்வெடிபொருட்கள் நாசமாகியுள்ளமைக்கு தற்போதைய அரசுக்கெதிரான உள்ளக வெளியகச் சக்திகள் காரணியாக அமைந்திருக்கலாம்.

உதய கம்மன்பில அவர்கள் மஹிந்த அணி ஆதரவாளராக இருப்பதோடு ஆயுதக்களஞ்சியம் அமைப்பதற்குச் சன அடர்த்தி குறைந்த வட மாகாணமே பொருத்தமானது எனக்கூறியிருப்பதானது சலாவ உள்ளடங்கலான சன அடர்த்தி கூடிய இடங்களில் இராணுவ முகாம்களோ ஆயுதக் களஞ்சியங்களோ அமைப்பது பொருத்தமற்றவொன்றெனவும் உணர்த்தியுள்ளார். அத்துடன் சன அடர்த்தி கூடிய இடங்களில் ஆயுதக்கிடங்குகள் அமைத்து அவற்றில் விபத்துக்கள் இடம்பெறும்போது பெருமளவில் மக்கள் மடியவேண்டிய நிலையுண்டெனவும் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

சலாவ ஆயுதக்கிடங்கு வெடிப்பின் பின்னரான மிக அண்மையான காலப்பகுதியில் உதய கம்மன்பில அவர்கள் வெளியிட்ட கருத்து அவ்வாயுதக்கிடங்கு வெடிப்பின் பின்னணியில் உள்ளக-வெளியக மைத்திரி-ரணில் அரசுக்கு எதிரான சக்திகளும் புலிகள் விரோத மஹிந்த கூட்டமைவினரும் சம்பந்தப்பட்டிருக்கலாமெனச் சந்தேகிப்பதற்கான ஏதுநிலையுமுண்டு. ஏனெனில் உதய கம்மன்பில அவர்கள் வடக்கில் ஆயுதக் களஞ்சியங்கள் அமைக்கவேண்டியதற்கான பத்துக்காரணிகளையும் கூடப் புலிகள் அமைப்பினரோடு தொடர்புபடுத்தி வெளியிட்டுமுள்ளார். அவையும் சலாவ ஆயுதக்கிடங்கு வெடிப்போடு தொடர்புபடுத்தி ஐயுறவோடு இயைந்த எண்ணோட்டத்தையே தோற்றுவிப்பனவாகவேயுள்ளன. சிந்தனைக்கு விருந்தாகவுள்ள உதய கம்மன்பில அவர்களால் தெரிவிக்கப்பட்ட பத்துக் காரணிகளையும் ஒவ்வொன்றாக உற்றுநோக்குவதும் பயனுள்ளவொன்றாகவேயிருக்க முடியும். அவையாவன இறுதிப்போரில் சரணடைந்த 12000 புலிகளுக்கு மிகக்குறுகியகால 03வருடங்களுக்குள் புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டுமிருந்தனர். அவர்களுக்கு என்னதான் புனர்வாழ்வு அளிக்கப்பட்டாலும் ஆயுத மனப்பாங்கு அவர்களிடம் இன்னுமுள்ளது.

போரில் இறுதியில் படையினரிடம் சரணடையாது தப்பியோடிய புலிகள் மக்கள் மத்தியிலேயே தற்போதும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஆயுதத் தீர்வையே இவர்கள் இன்னும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கில் தற்போதும் வெடிகுண்டுகள். தற்கொலை அங்கிகள் என்பன மீட்கப்படுகின்றன.

இலங்கையின் 2ஆயிரத்து 600வருட(2600) வரலாற்றில் வடக்கிலிருந்தே ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

வடக்கிலிருந்து கடல் மார்க்கமாக இந்தியா மிகவும் அருகிலுள்ளது. ஆயுதம். போதைவஸ்து கடத்தல்கள் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்திலும் இடம்பெறக்கூடிய சாத்தியங்களுமுள்ளன. இக்கடல் மார்க்கம் இன்னும் அதியுச்ச பாதுகாப்பு வலயமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிலில்லை.

வடக்கில் போரால் வீழ்ந்துபோன அரச பொறிமுறை மீண்டும் வலுப் பெறவில்லை.

சனத்தொகை குறைந்த இடங்களிலேயே இராணுவ முகாம்கள். ஆயுதக் களஞ்சியசாலைகள் அமைக்கப்பட வேண்டும். அந்த வகையில் இலங்கையில் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாகாணமாக வடக்கு மாகாணமுள்ளது. அங்குதான் பயன்படுத்தப்படமுடியாத நிலையில் பெரும ளவான காணிகள் உள்ளன.

வடக்கில் இராணுவ முகாம்கள். படைத்தளங்கள். ஆயுதக் களஞ்சியங்கள் அமைக்கக் கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள போதுங்கூட பிரிவினைவாதம் இன்னமும் தோற்கடிக்கப்படவில்லை. புலம்பெயர்ந்த நாடுகளில் அவர்களது செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டுதானிருக்கின்றன.

நாடுகடந்த தமிழீழ அரசு உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அதற்குப் பல நாடுகள் ஆதரவளித்துமுள்ளன. உதய கம்மன்பில அவர்கள் இப்பத்துக் காரணிகளை முன்வைத்திருப்பதோடு அக்காரணிகளின் நிமித்தம் வடக்கிலிருந்து ஓர் இராணுவ முகாமையோ அல்லது இராணுவச் சிப்பாயையோ அகற்றக்கூடாதெனவும் திருவாய் மலர்ந்தருளியுமுள்ளார்.

உதய கம்மன்பில அவர்களின் விடுதலைப்புலிகள் இன்னமும் ஆயுத மனப்பாங்கு உடையவராக இருக்கின்றார்கள். 2600 ஆண்டுகளுக்கு முன்னரே வடக்கிலிருந்து ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. வடக்கிலிருந்து கடல்மார்க்கமாக இந்தியா மிக அருகிலுள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்களால் தமிழ் ஈழத் தனியரசு நிறுவப்பட்டுள்ளமையும் அதற்குப் பல உலக நாடுகள் ஆதரவளித்திருக்கின்றன என்னும் கருத்துக்கள். வடக்கில் இராணுவ முகாம்களும் ஆயுதக்கிடங்குகளும் தொடர்ந்தும் இருக்கவேண்டுமென்பதை மட்டுமல்ல மேலும் அவை விஸ்தரிக்கப்படவேண்டுமென்பதையும் வலியுறுத்துபவையாகவே அமைந்துள்ளதெனலாம்.

மேலும் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய அரசாங்கமானது சீன சார்பாகவிருந்ததனால் அந்நாடும் விடுதலைப்புலிகளுக்கெதிராக பெருந்தொகையான ஆயுதங்களை இலங்கை அரசுக்கு விற்பனை செய்திருந்தது.

எனினும் தற்போது சீனாவின் அதிருப்தியாளர்களான மைத்திரி-ரணில் அரசு மஹிந்த ஆட்சிக்காலத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட வெடிபொருட்களில் யுத்தத்தின் பாவனைக்குட்பட்டவைபோக எஞ்சியவற்றை விற்பனை செய்திருந்த நாட்டுக்கே (சீனா) தாமும் விற்பனை செய்யத் தீர்மானித்திருந்த நேரத்திலேயே ஆயுதக்கிடங்கு வெடித்து வெடிபொருட்கள் வீணாகியுள்ளன.

எனவே இவ்வாயுதக்கிடங்கு வெடித்தமைக்கு உள்ளக விபத்துக் காரணமாக அமையாமல். மஹிந்த தரப்பு அணியினரும். மைத்திரி-ரணில் அரசின் மீது அதிருப்தி அடைந்துள்ள சர்வதேசியளவிலான சக்திகளும் சூத்திரதாரிகளாக விளங்கியிருக்கலாமென ஐயுற வேண்டியுள்ளது.

இவ்வாறு சந்தேகப்படுவதற்கு மஹிந்த தரப்பு உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்துக்களும் சாதகமாகவே அமைந்துள்ளதெனலாம்.

**இரணியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்



## தேன் எடுக்கச் சென்றவர் மீது கரடி தாக்குதல்

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹாவலி கங்கைக் காட்டுப்பகுதிக்கு தேன் எடுக்கச்சென்ற நபர், கரடி தாக்குதலுக்குள்ளான நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. தோப்பூர் பட்டாளிபுரத்தைச்சேர்ந்த 45 வயதுடைய சி.இராசரத்தினம் என்ற நபரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பட்டாளிபுரத்தைச் சேர்ந்த ஐந்து பேர், கடந்த 01ம் திகதி, மஹாவலி கங்கை பகுதியிலுள்ள காட்டுப்பகுதிக்கு தேன் எடுப்பதற்காகச் சென்றுள்ளனர். இதன்போது, திடீரென்று அங்கு வந்த கரடி இவர் மேல் பாய்ந்து தாக்கியுள்ளது. எனினும் இவரை கரடியிடமிருந்து காப்பாற்றிய மற்றையவர்கள் அவரை தோப்பூர் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். மேலும் குறித்த நபரை மேலதிக சிகிச்சைகளுக்காக தோப்பூர் வைத்தியசாலையிலிருந்து திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மாணவியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இளைஞன் கைது

சிலாபம், அம்பகந்தவில பிரதேசத்தில் பாடசாலை ஒன்றில் 10ஆம் ஆண்டில் பயிலும் மாணவியை அவரது வீட்டில் இருந்து அழைத்துச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இளைஞனை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவி 15 வயதானவர் எனவும் அவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இளைஞன் ஒரு மீனவன் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். மாணவியின் தாய் வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகிறார். இதனால், தந்தையின் பாதுகாப்பில் மாணவி இருந்து வந்துள்ளார்.

கடந்தஏப்ரல்மாதம்12ஆம்திகதியில்இருந்து மாணவி காணாமல் போயுள்ளார். எனினும் தந்தை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. வெளிநாட்டில் இருந்து திரும்பிய மாணவியின் தாய் தனது மகளை தேடுமாறு கணவனுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். இதனையடுத்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மாணவியை அழைத்துச்சென்று வைத்திருந்த இளைஞனை கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த இளைஞனுடன் தான் காதல் கொண்டிருந்ததாகவும் இதன் காரணமாக அவர் தன்னை அழைத்துச்சென்றதாகவும் மாணவி பொலிஸாரிடம் கூறியுள்ளார். இரண்டு நாட்கள் இளைஞனின் வீட்டில் தங்கியிருந்து விட்டு, ஏப்ரல் 15 ஆம் திகதி கருவலகஸ்வெவ பிரதேசத்தில் உள்ள இளைஞனின் சிறிய தந்தையின் வீட்டுக்கு தன்னை அழைத்துச்சென்றாகவும் மாணவி மேலும் கூறியுள்ளார். அன்றைய தினத்தில் இருந்து இளைஞன் தன்னுடன் உறவு கொண்டதாகவும் மாணவி குறிப்பிட்டுள்ளார். மருத்துவ பரிசோதனைக்காக மாணவி, சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரான இளைஞன் சிலாபம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## பாசிக்குடாவில் மீனவர்களின் காணிகளை அபகரிக்க முயற்சி

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா துறையில் மிகவும் பிரபல்யமான கல்குடா, பாசிக்குடா பகுதியில் உள்ள மீனவர்களின் வாடி அமைக்கப்பட்டுள்ள இடங்களை அரசாங்கம் சுற்றுலாத் துறைக்காக அபகரிக்க முயற்சி செய்வதாக அங்குள்ள மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர் .

இது தொடர்பாக பாதிக்கப்படவுள்ள மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில், கடந்த ஆட்சி காலங்களில் இருந்து சுற்றுலாத் துறைக்காக தங்களது தொழில் செய்வதற்கு உகந்ததாக இருந்த கடல் வள காணிகளை அபகரித்து இறுதியாக ஒரு ஒதுக்குப்புறமான இடத்திற்குச் செல்லுமாறு கூறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தங்களது கடல் வள காணிகளை விட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்களது தொழில் நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளனர் .

தற்போது மிகுதியாக உள்ள இந்த இடத்தையும் விடுவிக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தற்போது தெரிவித்துள்ளமை மிகவும் வேதனை அழிப்பதாக பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இந்த சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்பது எங்களை தொழில் இல்லாமல் ஆக்குவதற்கான நடவடிக்கையா? நாங்கள் எங்கு சென்று தொழில் செய்வது என்று தெரியாமல் இருக்கின்றது. இந்த நல்லாட்சி அரசாங்கம் எங்களது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காத பட்சத்தில் நாங்கள் எங்களது எதிர்ப்பை தெரிவிக்கவேண்டி வரும் எனக் குறிப்பிட்டுள்ளனர். கடந்த 5 வருடங்களில் பல இடங்களுக்கு எங்களை மாறிமாறிப் போகக்கூறி இனி எங்களுக்கு போவதற்கு இடம் இல்லாமல் போயுள்ளது. மீனவர்களின் வாழ்க்கையில் விளையாடி ஒரு சுற்றுலாத்துறை தேவையா? கிழக்கு மாகாண அரசியல்வாதிகளே! எங்கே இருக்கின்றீர்கள் என தங்களது ஆதங்கங்களை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர்.



## மடுத்திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா

மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆடிமாத திருவிழா கடந்த சனிக்கிழமை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரர் ஆயர் யோசேப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் இணைந்து காலை 6.15 மணியளவில் திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலியினைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் அதனைத்தொடர்ந்து மடு அன்னையின் ஆசீர்வாதமும் இடம் பெற்றது. இதன்போது வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், மன்னார் மற்றும் வவுனியா நீதிபதிகள், சட்டத்தரணிகள், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடு ஆலய பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியானுஸ் பிள்ளை மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், திணைக்களத்தலைவர்கள் உட்பட இலட்சக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசியை பெற்றனர்.

மடு அன்னையின் ஆடிமாத திருவிழா கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக நவநாள் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்ட நிலையில் திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## 7 மாதங்களில் டெங்கு காய்ச்சலால் 35 பேர் பலி

கடந்த ஏழு மாதங்களில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு 35 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த ஏழு மாத காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 20,954 பேர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறு டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, புத்தளம், குருநாகல் மாவட்டங்களிலேயே அதிகம் என தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.


இதேவேளை இரண்டு நாட்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது, நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான சூழல் அதிகம் காணப்பட்ட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளது.



## சிறுவர் மெய்வல்லுநர் போட்டிகள்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர் மு.ராமச்சந்திரன்

நுவரெலியா கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் மெய்வல்லுநர் போட்டிகள் 30-6-2016 நுவரெலியா சினிசிட்டா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதன்போது நுவரெலியா கல்வி வலய ஆரம்ப கல்வி உதவிப்பணிப்பாளர்களான செல்வராஜா, ஐராங்கனி, கோட்ட கல்விப்பணிப்பாளர் லோகநாதன், நுவரெலியா கல்வி வலயத்தின் மெய்வல்லுநர் போட்டிகளுக்கான ஆசிரிய ஆலோசகர்கள் ஸ்டீபன், வசந்தி மங்கலிக்கா மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களையும் இங்கு இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வுகளையும் காணலாம்.





## நீர்த்தேக்கத்திற்கு அருகில் ஏற்பட்ட வெடிப்பில் சிறுவன் படுகாயம்

கண்டி நவாலயத்தென்ன-பொல்கொல்ல நீர்த்தேக்கத்திற்கு அருகில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவம் காரணமாக சிறுவன் ஒருவன் காயத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நவாலயத்தென்னவில் உள்ள பனகால விகார மாவத்தையை சேர்ந்த 12 வயதுடைய சிறுவனே பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். குறித்த சிறுவன் தன் அம்மாவுடன் நீர்த்தேக்கத்தில் குளித்துக் கொண்டிருந்தப்போதே இந்த விபத்து சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

காயமடைந்த சிறுவனை கடுகஸ்தொட்டை வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும், பின்மேலதிகசிகிச்சையினை பெறுவதற்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த வெடிப்புச் சம்பவத்திற்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்றும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கண்டி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டின்சின் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்ட இருவரை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டின்சின் கெசல்கமுவ ஓயா ஆற்றுப்பகுதியில் 01.07.2016 மதியம் மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இருவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் அட்டன் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அந்த படத்தை யாரும் பார்க்காதீர்கள் – வீரப்பன் மனைவி



ராம் கோபால் வர்மா இயக்கத்தில் கொன்று விடாத வில்லன் வீரப்பன் என்ற திரைப்படம் வெளியாகி இருக்கிறது. இந்த படத்தில் வீரப்பன் குறித்து பல விஷயங்கள் படமாக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் படம் குறித்து வீரப்பன் மனைவி கூறுகையில், இந்தப் படத்தை யாரும் பார்க்கவேண்டாம். இதில் வரும் சம்பவங்கள் அனைத்தும் தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

## விபத்தில் சிக்கிய பாலகிருஷ்ணா – ரசிகர்கள் அதிர்ச்சி



தெலுங்கு சினிமாவின் பிரபல நடிகரும், எம்.எல்.ஏவுமான நடிகர் பாலகிருஷ்ணா கார் விபத்தில் சிக்கி அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்திருக்கிறார். பெங்களூர் விமான நிலையத்துக்கு காரில் சென்றுகொண்டிருக்கும் போது, பாகபல்லி என்ற இடத்தில் பாலகிருஷ்ணாவின் கார் தடுப்புச்சுவரில் மோதி விபத்துக்குள்ளாகியது. மேலும் காரின் முன்பக்க டயரும் வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக பாலகிருஷ்ணாவும் அவருடன் உடன் வந்தவர்களும் காயம் ஏதுமின்றித் தப்பினர்.

## மீண்டும் ரஜனியுடன் ஒரு படத்தில் நடிக்கவேண்டும்



ரஜனியின் புகழ் கோலிவுட், டோலிவுட் தாண்டி தற்போது பொலிவுட்டிலும் பரவிக் வருகிறது. எந்த ஒரு பொலிவுட் நடிகர்களிடமும் தமிழில் உங்களுக்கு எந்த நடிகரை பிடிக்கும் என்று கேட்டால் ஒரே பதில் ரஜனிகாந்த் தான். இவர் நடித்த கபாலி படம் விரைவில் வரவுள்ளது, இந்நிலையில் பொலிவுட் நடிகர் ஜாக்கி ஷெரப் சமீபத்தில் ஒரு பேட்டியளித்துள்ளார்.

இதில் ரஜனியுடன் கோச்சடையான் என்ற அனிமேஷன் படத்தில் நடித்தேன், ஆனால், மீண்டும் அவருடம் ஒரு படத்தில் நடிக்க வேண்டும், இதுவே என் விருப்பம் எனக் கூறியுள்ளார்.

## ரூ.250 கோடி சாதனையை டார்ஜன் முறியடிக்குமா?



இந்திய சினிமாவில் சமீப காலமாக ஹொலிவுட் படங்களின் ஆதிக்கம் அதிகமாகவே உள்ளது. அதிலும் கடந்த கோடை விடுமுறையில் வந்த ஜங்கிள் புக் ரூ.250 கோடி வரை இந்தியாவில் வசூல் செய்தது. இதைத்தொடர்ந்து எக்ஸ். மேன் சீரியல், சிவில் வார், கான்ஜூ ரிங்-2 ஆகிய படங்களும் நல்ல வசூலை தந்தது. இந்நிலையில் அடுத்து இந்தியா முழுவதும் பல திரையரங்குகளில் இந்த வாரம் வெளிவரும் படம் டார்ஜன்.

இப்படத்தின் தமிழக உரிமையை மு.சு.கிரியேஷன் நிறுவனம் வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்படம் ஜங்கிள் புக் சாதனையைமுறியடிக்குமாஎன்பதைபொறுத்திருந்து பார்ப்போம். மேலும், இப்படத்தை இலவசமாக பார்க்க, இப்படத்தின் இயக்குனர் யார், நடிகர் யார்? என்ற கேள்விக்கு News@cineulagam.com என்ற மின்னஞ்சலுக்கு பதில் அனுப்பி இலவச டிக்கெட்டை வெல்லுங்கள்.

## விஜயா? சூர்யாவா? யாருக்கு அடிக்கும் ஜெக்பொட்



தளபதி விஜய், சூர்யா இருவருமே தமிழ் சினிமாவின் பொக்ஸ் ஒபிஸ் மன்னர்கள். இவர்கள் படங்கள் வருகிறது என்றாலே எதிர்ப்பார்ப்பு விண்ணை முட்டும். அந்த வகையில் அடுத்து சுந்தர்.சி ரூ.300 கோடி பட்ஜெட்டில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளிலும் ஒரு பிரமாண்ட படைப்பை உருவாக்கவுள்ளார்.

இப்படத்தில் ஹீரோவாக நடிக்க விஜய், சூர்யாவிடம் தான் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இந்த பிரமாண்ட ஜெக்பொட் யாருக்கு அடிக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## ரஜனி தான் எப்போதுமே சூப்பர் ஸ்டார் – பிரபல நடிகர் புகழாரம்



ரஜனி நடித்து வரும் 2.0 படத்தில் அக்ஷய் குமார் ஒரு முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார். அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அக்ஷய் குமார் பேசும்போது, எனக்கு ரஜனியை பல வருடங்களாக தெரியும், அவருடன் நடிக்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் கனவு. இப்போது தான் அது நிறைவேறி இருக்கிறது, அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ரஜனியை என்னிடம் அறிமுகப்படுத்திய போது, இங்கு அவர் தான் சூப்பர் ஸ்டார் என்றார்கள். இங்குமட்டுமல்ல, இந்தியா அளவில் அவர்தான் சூப்பர் ஸ்டார். சினிமாவில் மட்டுமல்ல உண்மையாகவும் அவர் சூப்பர் ஸ்டார் என்றார்.

## இருமுகன் படத்தை யார் வாங்கியுள்ளது தெரியுமா?



விக்ரம் நடிப்பில் ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் பிரமாண்டமாக தயாராகிவரும் படம் இருமுகன். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தான் காஷ்மீரில் நடந்து முடிந்தது. இந்நிலையில் இப்படத்தின் வெளியீட்டு உரிமையை Aura Cinemas வாங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிறுவனம் இதற்கு முன் உப்புக்கருவாடு படத்தை வெளியிட்டது. இதுமட்டுமன்றி விஜய் ஆண்டனியின் சைத்தான், பிரபுதேவா நடிக்கும் தேவி படத்தையும் இந்நிறுவனம் வெளியிடவுள்ளதாக கூறப்படுகின்றது.

## இந்த இயக்குனர் படத்திற்கு இசையமைக்கிறாரா ரகுமான்



ஏ.ஆர்.ரகுமான் ஒரு படத்தில் கமிட் ஆகிறார் என்றாலே அது பிரமாண்ட படமாக தான் இருக்கும், அந்த வகையில் இவர் தற்போது மணிரத்னம் இயக்கும் படம், ஷங்கரின் 2.0 ஆகிய படங்களுக்கு இசையமைத்து வருகிறார்.

இதைத்தொடர்ந்து சுந்தர்.சி ரூ.300 கோடி பட்ஜெட்டில் ஒரு படத்தை இயக்கவுள்ளாராம், இந்த படத்தில் பெரும்பாலும் சூர்யா நடிப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இப்படத்திற்கு இசை ஏ.ஆர்.ரகுமான் என கிசுகிசுக்கப்படுகின்றது. அதிகாரபூர்வ தகவல் வரும் வரை காத்திருப்போம்.

## ஆயிரக்கணக்கானோர் டிகாப்ரியோவிற்கு கோரிக்கை



தி ரெவனண்ட் படத்தின் மூலம் எப்படியோ ஒஸ்கர் வாங்கிவிட்டார் டிகாப்ரியோ. இவர் அடுத்து எந்த படத்தில் நடிப்பார் என்பதே பலரின் எதிர்ப்பார்ப்பாக இருந்து வந்தது. இந்நிலையில் இவர் அடுத்து ரூமி என்ற படத்தில் நடிக்க கமிட் ஆகியுள்ளார். பாரசீக கவிஞர் ரூமி அவர்களின் வாழ்க்கையை மையமாககொண்டு இப்படம் எடுக்கப்படுகின்றதாம். இதில் ரூமியாக டிகாப்ரியோ நடிக்கின்றார்.

ஆனால், அவர் இந்த படத்தில் நடிக்க கூடாது. மத்தியகிழக்கு நாடுகளைச்சார்ந்த யாராவது ஒருவர் தான் இதில் நடிக்க வேண்டும் என ஆயிரம் பேருக்கு மேல் கையெழுத்துப்போட்டு டிகாப்ரியோவிற்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

## கமலின் ஆக்ஷன் அவதாரம்



கமல் நீண்ட நாட்களாவே ரசிகர்களை திருப்திப்படுத்தும் விதமாக எந்த ஒரு படங்களையும் கொடுக்கவில்லை. இவருடைய படங்கள் ஒரு தரப்பு ரசிகர்களை மட்டுமே கவந்தது. இந்நிலையில் தற்போது இவர் நடித்து வரும் சபாஷ் நாயுடு படம் கூட ஒரு கொமடி படம் தான். இந்நிலையில் கமல் அடுத்து மீண்டும் ஒரு ஆக்ஷன் படத்தில் நடிக்கவுள்ளாராம். இப்படம் முழுக்க முழுக்க ஆக்ஷனுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதிரடி சண்டைக்காட்சிகளுடன் வெளிவருமாம். இப்படத்தை தூங்காவனம் இயக்குனர் ராஜேஸ் தான் இயக்கவுள்ளார்.

## முன்னணி நடிகருக்கு ஜோடியான மஞ்சிமா மோகன்



சிம்பு நடித்த அச்சம் என்பது மடமையடா படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகவிருக்கிறார் மஞ்சிமா. இவர் அடுத்து சுசீந்திரன் இயக்கத்தில் விஷ்ணுவிற்கு ஜோடியாக ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்.

இதைத்தொடர்ந்து லிங்குசாமி இயக்கும் சண்டக்கோழி-2 படத்தில் விஷாலுக்கு ஜோடியாக நடிக்க கமிட் ஆகியுள்ளார். நடித்து இன்னும் ஒரு படம் கூட வரவில்லை, அதற்குள் மஞ்சிமாவிற்கு படங்களாக குவிகின்றது.

## நயன்தாரா ஏற்படுத்திய சலசலப்பு, முன்னணி நடிகர் கோபம்




நயன்தாரா தமிழ் சினிமாவின் முன்னணி நடிகை. இவர் நடித்த நானும் ரவுடி தான் படத்திற்காக பல விருதுகளை பெற்று வருகிறார். இந்நிலையில் SIIMA விருது விழாவிலும் சிறந்த நடிகை என்ற விருதை பெற்றார். அப்போது தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுன் கையால் இந்த விருதைப்பெற மறுத்த இவர், விக்னேஷ் சிவன் கையால் பெறவேண்டும் என கூறினார்.

இதனால், தெலுங்கு சினிமா ரசிகர்கள் மிகவும் கோபமடைந்து விட்டனர். இதை தொடர்ந்து கொஞ்சநேரம் சலசலப்பு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2010ஆம் ஆண்டுகளில் கிராமிய பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையில்தான் அமைக்கப்படவேண்டும் என்கிற திட்டம் முன்னெடுக்கப்பட்டு தீர்வாகியபோதிலும். அமைக்கும் பணிகள் ஒருசில அரசியல்வாதிகளது தலையீடுகளின் காரணமாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டது. தற்போது 2016ம் ஆண்டு நிறைவுபெறவிருக்கும் இந்நிலையில் இவ்வர்த்தக மையம் நிறுவப்படுவதில் அரசியல் இல்லை.

ஓமந்தைப் பகுதிக்கு இவ்வர்த்தக மையம் கொண்டுசெல்லப்படுவதனால் அப்பிரதேசம் வளர்ச்சி காண்பதுடன் விவசாய முன்னேற்றத்திற்கும் அது வலுச்சேர்க்கும். இந்த அரசியல்வாதி அப்படிச் சொல்கிறார். இந்த அரசியல்வாதி இப்படிச் சொல்கிறார் என்பதல்ல இங்கு விடயம். மக்கள் பயனடையும் வகையில் இவ்வர்த்தக நிலையம் அமைக்கப்படுகிறதா? என்பதுதான்

கைத்தொழில். மயிலிட்டியில் மீன்பிடித் தொழிற்சாலை உட்பட இலங்கை முழுவதிலும் 32 அபிவிருத்தி மையங்கள் அமைக்கும் திட்டமாக அது காணப்பட்டது. இவ்விடயங்கள் தொடர்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எடுத்துரைத்துள்ளதாகவும். இதற்கான ஆவணங்களை அவரிடம் கையளித்திருப்பதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே நாம் இங்கு விவசாயிகளின் நலனை கவனத்திற்கொள்ளவேண்டும். இவ்வர்த்தக நிலையம் ஓமந்தையை நோக்கி நகர்த்தப்படுமாகவிருந்தால் வவுனியாவின் வர்த்தக நிலையங்களில் வியாபாரம் பாதிப்படையக்கூடும் என்கிற காரணத்திற்காக 253 கமக்கார அமைப்புக்களையும் புறந்தள்ள முடியாது. இவ்வர்த்தக மையம் அமைக்கப்படுவதில் தூரம் என்பது முக்கியமானதல்ல. குறிப்பாக தம்புள்ளைக்கு இலங்கையிலிருந்து அனைத்துபாகங்களிலும் மரக்கறிகள் கொண்டுசெல்லப்படுகின்றன. ஆனால் தம்புள்ளை சந்தை ஒரு வர்த்தக மையம் அல்ல. அவ்வாறிருக்கின்றபோது வடக்கிற்காக ஒரு வர்த்தக மையம் அமைக்கப்படும்போது ஓமந்தைப் பிரதேசத்திற்கு

செயற்படுவதாகவும் மக்கள் தமது கருத்துக்களில் கூறியுள்ளனர்.

இவ்வர்த்தக மையம் தாண்டிக்குளத்தில் தான் அமைக்கப்படவேண்டும் என்கிற பின்னணியில் அமைச்சர் றிசாட் அவர்கள் நேரடியாகத் தொடர்புபடுவதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் அவர்கள் நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வவுனியாவில் ஊடகவியலாளர் மாநாட்டினை நடத்தியிருந்த வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் அவர்கள் வர்த்தக மையத்திற்கும். அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை எனக்குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக சாள்ஸ் அவர்களிடம் வினவியபோது. இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் சத்தியலிங்கத்திற்குத் தெளிவு இல்லை எனக்கூறியிருந்தார். அமைச்சர் றிசாட் அவர்கள் தொடர்பாக A-Zவரை தனக்குத் தெரியும் எனக்குறிப்பிட்ட அவர். மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகள் மக்களின் நலனில் அக்கறையுடன் செயற்படவேண்டுமே தவிர. அதற்கு மாறாகச் செயற்படக்கூடாது. சோரம்போகும் அரசியலில் ஈடுபடு

# கிராமிய பொருளாதார வர்த்தக நிலையம் ஓமந்தையில் அமைக்கப்படுவதே சிறந்தது



வாதிகள். வர்த்தகர்கள். விவசாயிகளுக்கிடையில் முறுகல்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒருசில அரசியல்வாதிகள் தமது வர்த்தகத்தினை மேம்படுத்தும் வகையிலும். வவுனியாவில் இருக்கக்கூடிய ஒருசில வர்த்தகர்கள் தமக்கு இடையூறு என்பதனாலும் இவ்வர்த்தக மையம் அமைப்பதில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். இங்கிருந்து 125 கிலோமீற்றர் தொலைவிலுள்ள தம்புள்ளைக்குச்சென்று மரக்கறிகளை கொள்வனவு செய்யமுடியுமாகவிருந்தால். வவுனியாவிலிருந்து ஓமந்தைக்குச்சென்று மரக்கறிகளை கொள்வனவு செய்வதில் என்ன சிரமம் இருக்கிறது. இதனை வர்த்தகர்கள் புரிந்துகொண்டாலும் அரசியல் வாதிகளில் ஒருசிலர் தமது சுயநல செயற்பாடுகளுக்காக இவ்வர்த்தக மையத்தினை தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என ஆர்ப்பாட்டங்களையும். உண்ணாவிரதங்களையும் மேற்கொள்கின்றனர்.

இதில் குறிப்பாக வடமாகாண முதலமைச்சர். வட.விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசன். பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் போன்றோர் ஒருமித்த கருத்திலே ஓமந்தையில் தான் அமைக்கப்படவேண்டும் என்கின்றனர். சாதாரணமாக வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள FoodCityயில் பொருட்களை கொள்வனவு செய்வதில் வாகன இடையூறுகளால் மக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். தாண்டிக்குளப் பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகில் இந்த பொருளாதார மத்திய நிலையம் , அமைக்கப்படும்போது வாகன நெரிசல்கள் அதிகமாக ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. மறுபக்கத்தில் கழிவுப்பொருட்களை அகற்றுவதிலும் பல சிரமங்கள் ஏற்படும். ஏற்கனவே வவுனியாவில் இறைச்சி. மரக்கறிகளை விற்பனை செய்யும் சந்தைப்பகுதியில் கழிவுப்பொருட்கள் உரிய வகையில் அகற்றப்படாததொரு நிலை காணப்படுகின்றது. இதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர். ஆகவே பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படும் பகுதியில் கழிவுப்பொருட்கள் அதிகம் சேருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது. இதனை விடவும் குறைந்தது 2.3 பாரஊர்திகள் இந்தப் பிரதேசங்களில் தரித்துச்செல்வதற்கான வசதிகள் சிரமத்துக்குரியது. ஒரு வர்த்தக மையம் அமைக்கும் இடத்தில் அதிகமான வாகனங்கள் வந்து செல்லும். எனவே அதற்கு போதியளவு இடவசதியினைக் கொண்ட இடமாக அமையவிருக்கும் பிரதேசம் காணப்படவேண்டும். அவ்வாறான வசதிகளைக் கொண்ட பிரதேசமாக தாண்டிக்குளம்

முக்கியம். முதலீட்டாளர்கள். விவசாயிகள். வியாபாரிகள் இம்மூவருமே இந்த வர்த்தக மையத்துள் முக்கிய பங்குதாரர்களாக அங்கம் வகிக்கப்போகின்றனர். ஆகவே இவர்களுடைய நலன்கருதியே செயற்பாடுகள் அமையப்பெறவேண்டும். அரசியல் கலப்புடன் இவ்வர்த்தக நிலையம் அமைக்கப்படுமாகவிருந்தால் அது தமிழ் மக்களுடைய விருப்புக்களை நிறைவேற்றமுடியாத சூழ்நிலையை உருவாக்கும். 16 வர்த்தக அமைப்புக்கள் தாண்டிக்குளத்தில் அமைக்கப்படவேண்டும் எனவும். ஓமந்தையில் அமைக்கவேண்டும் என 253 கமக்கார அமைப்புக்களும் கையெழுத்திட்டு வடக்கு முதல்வரிடம் மகஜர் ஒன்றினைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

கடந்த 15.06.2010ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த வர்த்தக நிலையம் ஓமந்தையில் அமைப்பது தொடர்பிலான முடிவுகள் எடுக்கப்பட்டதுடன். இதற்குரிய காணி வனத்துறையினரிடம் அனுமதி பெறப்பட்டு. அடிக்கல் நாட்டுவது மாத்திரமே எஞ்சியிருந்தது. அன்று இணைத்தலைவர்களாக அமைச்சர் றிசாட் பதியுதீன். வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோரும். பாராளுமன்ற உறுப்பினர்களாக செல்வம் அடைக்கலநாதன். சிவசக்தி ஆனந்தன். உமைஸ் பாருக். நூர்தீன் மசூர் போன்றோரும் கலந்துகொண்டிருந்தனர். அப்பொழுது வவுனியா மாவட்ட அரச அதிபராக திருமதி.சாள்ஸ் பதவி வகித்தார். இச் சந்திப்பில் மாகாண உறுப்பினர்கள். அரச பிரதிநிதிகள் என 82பேர் கலந்துகொண்டிருந்தனர். அப்போது வவுனியாவின் நகரசபைத் தலைவராக நாகராசா பதவியிலிருந்தார். 2007ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆட்சியிலிருக்கும்போது வரவு செலவு திட்டத்தில் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. அமைக்கப்படவிருந்த 04 பொருளாதார மத்திய நிலையங்களில் ஒன்றுதான் வவுனியாவின் ஓமந்தையில் நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதில் தொழில்நுட்பக் கல்லூரிகளும். [illegible]

மக்கள் வரமாட்டார்கள் எனக்கூறுவது நகைப்பிற்குரியது.

குறிப்பாக மீன்கள் கொழும்பிற்கு மன்னார். யாழ்ப்பாணத்திலிருந்து கூட கொண்டுசெல்லப்படுகின்றது. ஆகவே வர்த்தகம் என்பதற்கு தூரம் ஒரு காரணமாக அமையமாட்டாது. தாண்டிக்குளத்தில் அமைக்கப்படவேண்டும் என வர்த்தகர்களும். அவர்கள் சார்ந்த அரசியல்வாதிகளும் கூறும் காரணங்களாக. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுச்சந்தை. பாற்பண்ணை. வெதுப்பகம். பண்ணை போன்றவற்றில் அதனது வர்த்தக செயற்பாடுகள் முடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். அதேவேளை ஹம்பாந்தோட்டை துறைமுகம். மத்தல விமான நிலையம் போன்றன பொருத்தமற்ற பகுதிகளில் அமைக்கப்பட்டிருப்பதனால் பல கோடிரூபாய்கள் செலவழித்தும் அதன் மூலமாக வருமானம் எதனையும் பெற்றுக்கொள்ள இயலாத சூழ்நிலையும் காணப்படுகின்றது. ஓமந்தை பிரதேசத்தில் வர்த்தக மையம் அமைக்கப்பட்டால் இவ்வாறான நிலையே உருவாகும் என்கின்றனர்.

ஒரு வர்த்தக மையத்தினை இவற்றுடன் ஒப்பிட இயலாது. மரக்கறிகள் என்பது மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக அமைகின்றது. ஆகவே மன்னார். மல்லாவி. ஒட்டுசுட்டான். கிளிநொச்சி. விசுவமடு. யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்படும் பொருட்களை தம்புள்ளை மற்றும் கொழும்புக்கு கொண்டுசெல்ல வேண்டிய தேவை ஏற்படாது. பெரும்பாலான வெங்காயம். மிளகாய். கத்தரி போன்ற பொருட்கள் யாழில் பாரிய விளைச்சலைக் கண்டுள்ளது. யாழில் உற்பத்தி செய்யப்படும் புகையிலை, மிளகாய்க்குத் தனியான வரவேற்பு இருக்கிறது. உருளைக்கிழங்கு. கரட் போன்றவைகளும் யாழில் உற்பத்தியாகிறது. ஆகவே காலப்போக்கில் இப்பிரதேசமானது பாரிய அபிவிருத்தியினைக் கண்டுவிடும் என்றநோக்கில் இதனைத்தடுத்து நிறுத்தும் ஒரு திட்டமாக அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்கள் இதன் பின்புலத்தில் இருந்து

பவர்களாகவிருந்தால் அது தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் அபிவிருத்திகளை தடுக்கும் செயற்பாடாகவே அமையும். இவ்வர்த்தக மையம் அமைப்பது தொடர்பில் 30.06.2016அன்று காலை சிதம்பரபுரத்தில் இடம்பெற்ற காணிப்பத்திரம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டிருந்த வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எடுத்துரைத்ததுடன். அதனைத் தெளிவுபடுத்தும் வகையில் அவரிடம் 253 கமக்கார அமைப்புக்களின் கையெழுத்து அடங்கலான மகஜர் ஒன்றினையும் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வவுனியாவில் இருக்கக்கூடிய வர்த்தகர்களைப் பகைத்துக்கொண்டு சிவசக்தி ஆனந்தன் அவர்கள் அரசியலில் ஈடுபடமுடியாது என்பது ஒருசிலருடைய கருத்தாகும். எனவே அவரைக் குற்றஞ்சாட்டும் நோக்கில் கடந்தவாரம் துண்டுப்பிரசுரம் ஒன்று வவுனியாவில் வெளியிடப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்ட விடயம் என்னவெனில்.

வந்தேறு குடிகளுக்கு வவுனியாவில் வர்த்தக மையமா? பொருளாதாரம் இருந்துவிட்டால் பொருளாதார மையம் அமைக்கும் இடத்தை தீர்மானிக்கும் தகுதி உங்களுக்கு உண்டா? உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது - வன்னி மைந்தர்கள் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது சிவசக்தி ஆனந்தனது தனிப்பட்ட அரசியலை சிதறடிக்கும் நோக்கில் விசமிகளால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரமாகவே கருதப்படுகிறது. மக்களின் நலனுக்காகச் செயற்படும் சிவசக்தி ஆனந்தனை மக்கள் மத்தியில் ஒரு துரோகியாக இனங்காட்ட சிலர் முயல்கின்றனர். தமிழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் கரிசனையுடன்செயற்பட்டால்எமக்குவரப்போகும் ஆபத்துக்களில் இருந்து தப்பித்துக்கொள்ள இயலும். இதனை விடுத்து அரசியல்வாதிகளது தலையீடுகளை முன்கொண்டுசென்று உங்களது கருத்து என்ன? என ஒவ்வொரு அரசியல்வாதிகளையும் தூண்டி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களையும். பாராளுமன்ற. மாகாண சபையின் உறுப்பினர்களையும் குழப்பமான சூழ்நிலைக்குள் தள்ளி அரசியல் நடாத்தும் ஒருசில ஊடகங்கள் மிக அவதானமாக செயற்படவேண்டும். போலியான இணையத்தளங்களும். முகநூல்களும் தற்போது தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகளிடையே குழப்ப நிலைகளை உருவாக்கும் நோக்கிலே செயற்பட்டுவருகின்றன. 11ஆம் பக்கம் பார்க்க...

– நெற்றிப்பொறியன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையினை இல்லாதொழிப்பதற்கு முன்னர் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் – பி.எஸ்.எம்.சார்ள்ஸ்



வறுமையினை இல்லாதொழிப்பதற்கு முன்னர் மனப்பாங்குகளிலும் சிந்தனைகளிலும் பாரம்பரியமான சில நடைமுறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார். பல்துறைசார் போஷாக்கு அபிவிருத்தி செயல்திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான மீளாய்வுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ் மீளாய்வுக் கூட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட போஷாக்கு தொடர்பானபல்துறைசார்செயற்பாட்டுத்திட்டம் தொடர்பான வேலைத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. அத்துடன் எதிர்கால நடவடிக்கை தொடர்பான திட்டமிடலும் நடைபெற்றது. இதில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.கிரேஸ். கிரான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.ராமச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். அத்துடன் பிரதேச செயலாளர்கள். திணைக்களத்தலைவர்களும்பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இளவயது திருமணம். பாடசாலை இடைவிலகல். பெற்றோர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவை அனைத்துக்கும் வறுமை முழுமையான காரணமல்ல. வெளிநாடு செல்வதற்காக அரசாங்கம் விதித்திருக்கின்ற கட்டுப்பாடுகளை மீறியும் வெளிநாடுகளுக்குச் செல்பவர்களும் இருக்கிறார்கள். அங்கு சென்று திரும்பி வந்தவர்களும் இருக்கிறார்கள். வறுமையினை இல்லாதொழிப்பதற்கு முன்னர் மனப்பாங்குகளிலும். சிந்தனைகளிலும். பாரம்பரியமான சில நடைமுறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பல்துறைசார் போஷாக்கு அபிவிருத்தி செயல்திட்டமானது ஒரு பிரதேச செயலாளருக்கு மட்டும் பொறுப்பளிக்கப்பட்ட விடயமல்ல. தேசிய ரீதியானதொரு விடயம். இதற்கு அனைத்துத் துறை சார் திணைக்களங்களும் இணைந்து செயற்படவேண்டும். அதன் மூலமே ஜனாதிபதியின் சிந்தனையில் உதித்த போஷணைக் குறைவற்ற நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான தொழில் துறைகளான விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் மேம்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் வருமான மட்டத்தினை உயர்த்தி மக்களது திறன்களை மேம்படுத்த முடியும். அத்துடன் துறைசார்ந்த திணைக்களங்கள் கிராமங்கள். குடும்பங்கள்ரீதியாககவனங்களைச்செலுத்தி ஏற்கனவே வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள். பயிற்சிகள். மேலதிக நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் அல்லது முன்னேற்றம் ஏற்படாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் கண்டறியப்படவேண்டும். அதன் மூலம் தொழில்துறைகளை சிறப்பாக முன்னேற்ற முடியும்' என்றார்.

## 10ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவ்இணையத்தளங்கள்தேசியமட்டத்திலான பிரச்சினைகளை கருத்திற்கொள்வதில்லை. தமது வயிற்றுப்பிழைப்புக்களுக்காக அரசியல்வாதிளைத் தூண்டிவிட்டு தேவையற்ற செய்திகளை வெளிட்டு வருகின்றனர். யுத்த காலப்பகுதியில் இவ் இணையங்கள் எங்கிருந்தன என்று தெரியாது. இலங்கையில் முதன் முதலில் தமிழ் நெற் என்ற ஊடக இணையத்தைக் கொண்டுவந்தவர் ஊடகவியலாளர் சிவராம் அவர்களே. அக்காலத்தில் வெளிவந்த செய்திகளை இவ் இணையத்தளங்கள் மீண்டும் ஒருமுறை மீட்டிப்பார்க்கவேண்டும்.

வர்த்தக மையம் அமைப்பது தொடர்பில் அரசியல்வாதிகள் அமைதியாக விருந்தாலும் அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மற்று வடமாகாண சபையின் ஒருசில அரசியல்வாதிகளுக்கு ஆதரவாகசெயற்படும்ஊடகஇணையங்களும். வவுனியாவிலிருக்கக்கூடிய ஒருசில அமைப்புக்களும் தவறான பாதையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இவர்கள் அரசியலில் சாதனைகளைப் புரிந்துவிட்டனர் என்கிற எண்ணம் மேலோங்கியிருக்கின்றது. யுத்த காலத்தில் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புக்களில் அவர்களது துன்பங்களில் கலந்து தமது உயிரைத் துச்சமென மதித்து செயற்பட்டுவந்தனர். இதில் தேசியம். சுயநிர்ணய உரிமை என்பன முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஒரு வர்த்தக மையம் அமைக்கப்படுவதில் இவ்வாறான சிக்கல்கள் உருவாகுமாகவிருந்தால் இதனைவிட தமிழ் மக்களுக்கு ஏராளமான அபிவிருத்திகள் வடபிராந்தியத்திற்காக வரவிருக்கின்றன. பொருளாதார மத்திய மையம் ஓமந்தையில் அமையப்பெறுவதனால் வடபகுதியிலிருக்கக்கூடிய தமிழ் மக்கள் மட்டுமல்லாது இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனைவரும் இதன் மூலம் நன்மையடைவர். ஆகவே தமிழ் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து ஓமந்தைப் பிரதேசத்தில் இவ்வர்த்தக மையம் அமைவதற்கு முன்னின்று செயற்படவேண்டும். இதனைக் குழப்பும் நோக்கில் செயற்படும் அனைவரும் தமிழினத்திற்கும். தமிழ்த்தேசியத்திற்கும் துரோகத்தினை ஏற்படுத்துகின்றனர் என்கிற ரீதியிலேயே அவர்களைக் கருதமுடியும்.

தமிழ் மக்களினதும். தமிழ் அரசியல் வாதிகளினதும் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. குழப்பநிலைகள் காரணமாக இவ்வர்த்தக மையம் பிறிதொரு இடத்திற்கு மாற்றம் பெறுமாகவிருந்தால் இதற்காக போராட்டங்களை மேற்கொண்டவர்களது நிலையும். இவர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையும் என்னவாகும் என்பதையும் சிந்திக்கவேண்டும். இப்பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுவதற்கு வடபிராந்திய தமிழ் மக்களும். தமிழ் அரசியல்வாதிகளும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்பதே வெளிப்படையான உண்மை.

---

மட்டக்களப்பு மாவட்டத்தின் 16 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இம்முறை சுமார் 251 ஹெக்டேயரில் சோளம் செய்கை பண்ணப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் இராசரெத்தினம் கோகுலதாசன் தெரிவித்தார்.

மாற்றுப் பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் கரடியனாறு. வாகரை. வாழைச்சேனை. வந்தாறுமூலை. கிரான். ஏறாவூர். ஆயித்தியமலை. மண்டபத்தடி. காத்தான்குடி. ஆரையம்பதி. களுவாஞ்சிக்குடி. பழுகாமம். மண்டூர். வெல்லாவெளி. தாந்தாமலை. கொக்கட்டிச்சோலை ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலேயே சோளம் செய்கை பண்ணப்பட்டுள்ளன. மேலும். சோளம் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய அடிப்படையில் சோளம் விதைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

---

## மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு ஆகிய பிரிவுகளால் சுகாதார அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

வடமாகாணத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னர் 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு ஆகிய பிரிவுகள் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இவ்விரு பிரிவுகளுக்குமென எந்தவொரு ஆளணியும் அனுமதிக்கப்படாத நிலையில் இப்பிரிவுகளின் அத்தியாவசிய தேவைகருதி ஆளணி அனுமதி பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைச்சர் வாரிய அனுமதியுடன் ஆளணி உருவாக்கல் கோரிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது.

2015ஆம் ஆண்டுக்கு ரூபா. 51 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு புனர்வாழ்வுப் பிரிவுக்கு ரூபா.40மில்லியன். மகளிர் விவகார பிரிவுக்கு ரூபா 11 மில்லியன் என பிரித்து வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பின்வரும் வேலைத்திட்டங்கள் அமைச்சினால் 2015ஆம் ஆண்டிலும் 2016ஆம் ஆண்டு மே மாதம் வரையிலும் நிறைவேற்றப்பட்டிருந்தன.

புனர்வாழ்வு பிரிவு

1.முள்ளிவாய்க்கால் வடம் பாதிக்கப்பட்ட. முடிக்கப்பட்ட இயங்காத நிலையிலுள்ள விசேட தேவைக்குட்பட்டோருக்கான விசேட வகை மலசலகூடம் அமைத்துக்கொடுக்கும் நோக்குடன் சமூகசேவை அலுவலர். பொது சுகாதாரபரிசோதகர். கிராமசேவை அலுவலர். பிரதேச செயலாளர். சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் சிபார்சுடன் முதற்கட்டமாக 538 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் சுயமாக விசேடவகை மலசலகூடம் கட்டிக்கொள்ளாத தேவைப்படும் உத்தேச மதிப்பீடான தலா 162000.00இல் எம்மால் 122000ரூபா கொடுப்பனவாக வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் முதற்கட்ட கொடுப்பனவாக ரூபா 30000.00 வழங்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் 2015 டிசம்பர் 31ம் திகதி வரையில் கட்டி முடிக்கப்பட்ட மலசலகூடங்களுக்கான செலவினமாக 20.3 மில்லியன் தொகையான நிதி வழங்கப்பட்டது.

2.வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் பலத்த இடர்பாடுகளினிடையே வசித்துவந்த 189 குடும்பங்களுக்கு பிரதேச செயலாளரின் அனுசரணையுடன் 189 தற்காலிக வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக 13.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

3. மாகாணத்திற்கென மீளக்குடியமர்வு தொடர்பான கொள்கை வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மகளிர் விவகாரப் பிரிவு

1.மீள்குடியேற்றப் பிரிவான தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் பெண்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் 4 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு தைத்த ஆடைகள். தோல் உற்பத்தி. கடற்பாசி வளர்த்தல். சிற்றுண்டி தயாரித்தல் ஆகிய கருத்திட்டங்களின் கீழ் ரூபா 2.442 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதில் 50 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

2. மேலும் ரூபா 3.943 மில்லியன் பெறுமதியான சுயதொழில் உபகரணங்கள் 120 பயனாளிகளுக்கு தனியான வாழ்வாதார திட்டத்திற்காக யாழ் மாவட்ட செயலகத்தினூடாக வழங்கப்பட்டது.

3. கல்மடுநகர் மூலிகைத் தோட்டத்தில் மகளிர் குழுக்களூடாக மூலிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதற்கும். அம்மூலிகைகளை மாகாண சுதேச வைத்திய திணைக்களம் கொள்வனவு செய்வதன் மூலம் பெண்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கென ரூபா 3.115 மில்லியன் செலவிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் அப்பகுதியில் வசிக்கும் 40 பெண்கள் பயன்பெற்று வருகின்றனர்.

4.பெண்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகம். இளவயதுக் கர்ப்பம். குத்தகைக் கொள்வனவு முறை என்பன தொடர்பில் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கும் முகமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் யாழ்.பல்கலைக்கழக நாடக அரங்கியல் துறையினரும் எமது அமைச்சின் மகளிர் விவகாரப்பிரிவு மற்றும் தனியார் துறைக் கலைஞர்கள் ஆகியோர் இணைந்து குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. அத்துடன் இவ்வாறான துறைகளில் ஈடுபடும் தனியார் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தனியார் கலைஞர்களிடமிருந்து குறுந்திரைப்பட ஆக்கங்கள் பெறப்பட்டு இதில் வெற்றியீட்டிய கலைஞர்களுக்கான பரிசில்களும் கேடயங்களும் 2016ம் ஆண்டு சர்வதேச மகளிர் தின விழாவின்போது வழங்கப்பட்டன. இவ் 06விழிப்புணர்வு குறுந்திரைப்படங்கள் அடங்கிய இறுவட்டுகள் பாடசாலைகள். சுகாதார நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் காட்சிப்படுத்தப்படுவதற்காக வழங்கப்பட்டுள்ளதுடன் எமது அமைச்சின் இணையத்தளத்தின் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 1.5மில்லியன் செலவிடப்பட்டது.

5. மகளிரின்உற்பத்திப்பொருட்களுக்குசந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தாய்மார் கழகங்கள் மற்றும் மகளிர் அபிவிருத்திக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட ஆரோக்கிய உணவு வகைகளை விற்பனை செய்வதற்கும் சந்தைப்படுத்துவதற்கும் நல்லூர் உற்சவ காலப்பகுதியில் எமது அனுசரணையுடன் விற்பனை நிலையம் ஒன்று அமைத்துக்கொடுக்கப்பட்டது.

6. வடமாகாணத்தில் வாழும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகளை இனங்காணும் நோக்குடன் 5 மாவட்டங்களிலும் அரச. அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள். மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள். வலுவிழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் காணமற்போன உறவுகளைத் தேடும் உறவினர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தேவைப்பகுப்பாய்வு ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு 2016ம் ஆண்டின் சர்வதேச மகளிர் தின நிகழ்வின்போது வெளியிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இது கொள்கை வகுப்பாளர்களுக்கு மிகவும் அவசியமானதாகக் காணப்பட்டதொன்றாகும்.

7. ஆசிய அபிவிருத்தி வங்கியானது பெண்களை வலுவூட்டும் செயற்றிட்டத்திற்கு ரூபா 210 மில்லியனை வழங்க முன்வந்து இதற்காக செயற்றிட்ட முன்மொழிவை வழங்குமாறு கோரியது. இதற்கமைய அமைச்சர் வாரிய அனுமதியுடன் செயற்றிட்ட முன்மொழிவானது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

விசேட செயற்றிட்டங்கள்

பாதிக்கப்பட்ட மகளிர் மற்றும் விசேட தேவைக்குட்பட்டோர் தொடர்பான விபரங்களை துல்லியமான முறையில் புள்ளிவிபரங்களுடன் இனங்காணும் பொருட்டு நவீன தொழில்நுட்ப முறையில் விரிவான ஆய்வு ஒன்று முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று நிறைவுபடுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016ம் ஆண்டைப் பொறுத்தவரையில் மகளிர் விவகாரப் பிரிவுக்கு 80மில்லியன் நிதியும் புனர்வாழ்வுப் பிரிவுக்கு 45.2 மில்லியன் நிதியும் தேவையென கோரப்பட்டபோதிலும் மகளிர் விவகாரப் பிரிவுக்கு 10 மில்லியன். புனர்வாழ்வுப் பிரிவுக்கு 10 மில்லியன் என நிதியானது மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ஒதுக்கப்பட்டது. அதற்கான திட்ட முன்மொழிவுகள் நிதி ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அனுமதி இதுவரை கிடைக்காத நிலையில் நிதி முன்னேற்றம் காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்வாழ்விற்கான நற்சிந்தனைகள்



01. அதிகம் செய்வது சிறந்தது என்ற கருத்தை மாற்றிக்கொண்டு, குறைவாக செய்வதில் நிறைய பலன் உண்டு என்று நினைத்து நடவுங்கள், வாழ்வில் மகிழ்ச்சி ஆரம்பித்துவிடும்.

02. தினமும் மூன்று என்று திட்டமிட்டு காரியங்களை செய்து வந்தால் அதிசயிக்கக் கூடிய வெற்றியை எட்டித் தொட்டிருக்கக் காண்பீர்கள். முடித்தாக வேண்டிய பணி களில் முதல் மூன்றை தேர்வுசெய்து முடியுங்கள் என்பது இதன் கருத்து.

03. தேவையில்லாத விடயங்களை அங்குலம் அங்குலமாக யோசித்து, யோசித்து அலட்டிக்கொள்வதால் காலமும் நேரமும் விரயமாகிறதே அல்லாமல் வேறெதுவும் நடப்பதில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

04. அச்சத்தினால் ஒத்திப்போடும் பழக்கமே உங்கள் பகைவனாகும். அதை நிர்மூலம் செய்வதில்தான் வெற்றி தங்கியுள்ளது.

05. வாழ்க்கையில் சின்னச் சின்ன விடயங்கள் கூட பெரிய பெரிய சந்தோசத்தை அள்ளித்தரக் கூடியவை. அன்றாட வாழ்வில் சின்னச்சின்ன விடயங்களை முடிப்பதன் மூலம் பெரிய சந்தோசத்தை அனுபவிக்க முடியும்.

06. நமது மனோநிலையில் பொதிந்துள்ள ஆற்றல்தான் முடிவைத் தீர்மானிக்கப் போகிறது. ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பை தெரிவு செய்யுங்கள். வெற்றியை எதிர்பாருங்கள். ஆனால் வெற்றி நாளை வருமென்று மனதிற்கு தகவல் கொடுக்காதீர்கள். வெற்றி இதோ இதைப்பிடிக்க வந்திருக்கிறீர்களே இக்கணம்தான் வெற்றி.

07. உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். உங்களின் உள்ளேயுள்ள திசைகாட்டியின் வழியே நடவுங்கள். அதுதான் உள்ளிருப்பதை வெளிக்காட்டி வெற்றிகொள்ளும் வழிமுறையாகும்.

08. இடர்களை எதிர்கொள்ளத் துணிந்தவன் மட்டுமே உண்மையில் சுதந்திர மனிதனாகும். இடர்களை எதிர் கொள்ள தயங்குவோர் அடிமைகள்.

09. ரிஸ்க் எடுப்பது அவசியம். அதை குழந்தைகளின் சிறிய நடைபோல சிறிது சிறிதாக பிரித்து எடுத்தால் பாரம் தெரியா மலே இலக்கை அடைந்துவிடலாம்.

10. எல்லாவித மகிழ்வுகளையும் இழந்து தலைமைப் பதவியை அடைந்த ஒருவர் தனது வெற்றி கூட தவறான பாதையில் சென்றுவிட்டதைக் கண்டுகொண்டார்.

11. வெற்றி என்பது ஒரு தொடர் நடவடிக்கை, அது ஓர் உணர்வு, நான் யார் என்னவாக இருக்கிறேன், எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறேன், என்பது பற்றி நமக்குள்ளே ஜொலிக்கும் இதமான உணர்வுதான் வெற்றி.

12. அன்றாட வாழ்க்கையில் மூழ்கிப் போவதால் கனவுகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறோம். ஒரு கட்டத்தில் இலட்சியத்தையே மறந்துவிடுகிறோம். ஆகவேதான் நேரத்தை நழுவ விட்டுவிடக் கூடாது.

13. இதுவரை நீங்கள் பெற்றிருப்பதற்காக செலுத்தும் நன்றிகள் அந்த நன்மைகளை தொடர்ந்து பெருகச்செய்யும்.

14. பணப்பற்றாக்குறை இருக்கிறது என்ற எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுங்கள். என்வாழ்வில் ஏராள மாக பணம் சேர்கிறது என்ற எண்ணத்தை மனதிற்கு வழங்கி அமைதி காணுங்கள். பின்னர் அவதானியுங்கள் வளங்கள் பெருகியிருக்கக் காண்பீர்கள்.

15. தாங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேலை, பரவசமானதாகவும் அர்த்தம் நிறைந்ததாகவும் அமையப் பெற்றவர்கள் மிகவும் சந்தோசமானவர்கள்.

16. நாம் வலுவாக நினைக்கும் ஒன்று நமக்குக் கிடைக்கிறது.

17. பிரச்சினையில் கவனம் செலுத்து கிறோமா அல்லது தீர்வில் கவனம் செலுத்துகிறோமா என்பதை யோசித்து நடக்கவேண்டும்.

18. ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்கு 25 விதமான வழிமுறைகள் உள்ளன. எனவேதான் உங்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பல்வேறுவிதமான வழிகளை தேடுவதில் நாட்டம் காணுங்கள்.

19. வேகமாக ஓடுவோர் ஒரு கட்டத்தில் களைத்து நின்றுவிட வேண்டிவரும். சாவ காசம், நிதானம் என்பதே களைப்பின்றி பயணிக்க ஏற்ற மருந்தாகும்.

20. இந்த வாரமாவது உங்கள் வேக வியாதியை கொஞ்சம் ஒத்தி வையுங்கள். சாவகாசமாக, நிதானமாக செயற்படுவதில் உள்ள பரவசத்தை அனுபவியுங்கள்.

21. வெற்றியை புகழ்ந்து பாராட்டும் கலையை கற்றுக்கொள்ளவேண்டும். நாம் செய்ய வேண்டியதும், செய்ய முடிகிறதுமான காரியம் இதுவாகும்.

22. நாம் ஒழுங்காக செய்ததைவிட ஒழுங்குபட செய்யாத காரியத்தில்தான் கூடுதல் கவனம் செலுத்தி கவலைப்பட்டு வருகிறோம்.

23. குறைகளை பார்ப்பதை விடுத்து, உங்கள் வெற்றிகளையும், மற்றவர் வெற்றிகளையும் பாராட்டப் பழகுங்கள்.

24. வெற்றிகரமாக வாழ விரும்பினால் செம்மையான செயற்பாடு என்பதற்கு விடைகொடுக்க வேண்டிவரும்.

25. செம்மையோ செம்மை என்ற மனோ பாவம் நம்மிடமிருந்து விடுபடுவதற்கான பயிற்சியை மேற்கொள்வோம். திருத்தம், செம்மை என்பதை விடுத்து நன்றாக சிறப்பாக செயற்படுவதில் நாட்டம் கொள்வோம்.

**அசௌகரியமான வெளிச்சுவாசத்தினால் உங்கள் உடல் நிலையில் எற்படும் மாற்றங்கள் பற்றி தெரியுமா?**

நீங்கள் உங்கள் நண்பர்கள், சகபாடிகள் உங்களை நெருங்குவதை தவிர்ப்பதை கண்டிருக்கக்கூடும். அதற்கான காரணம் தெரியாமல் நீங்கள் பின் உங்கள் வெளிச்சுவாசத்தை பரிசீலித்திருக்ககூடும். இத்தகைய தருணங்கள் உங்களுக்கு இக்கட்டான சூழ்நிலையை தந்திருக்கலாம்.

கூடாதசுவாசம்வழமையானஒன்றல்ல. கருத வேண்டியது யாதெனில், நாம் உள்ளெடுக்கும் காற்று பல உடல் உறுப்புகளினூடு சென்று பின்னரே வெளிவருகிறது. இவ் உடல் உறுப்புகளின் நோய் வாய்ப்பட்ட தன்மை வெளிச்சுவாத்தின் கூடான தன்மைக்கு காரணமாக இருக்கலாம். இது உங்கள் சுவாசத்தொகுதியின் தன்மையை காட்டும் சாடைக்குறிப்பாக இருக்கலாம்.

வாய் முறையாக சுத்தமில்லாதவிடத்து அவைகூடாத பக்டீரியாக்கள் பெருக காரண மாகலாம். இவை துர்நாற்றத்துக்கு மட்டுமல்ல சமிபாட்டு தன்மையையும் மாற்றக்கூடியன.

எல்லாவகையான வயதினரும் போதியளவு நீரருந்துதல் அவசியமானதாகும். அதீத நீரிழப்பு கூடாத சுவாசம் வெளிவர காரண மாகலாம். அதேநேரம் குளிர்பானம், சோடா மற்றும் கோபி போன்ற பானங்களும் கூடாத சுவாசத்திற்கு காரணமாகலாம்.



### மூளை காயங்களுக்கு சிகிச்சையளிக்கும் தொழில்நுட்பம்

தற்போது ஆய்வாளர்கள் மூளை காயங்களுக்கு மருந்து மற்றும் நுண் துகள்களை செலுத்தும் நவீன தொழில்நுட்பம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். இத் தொழில்நுட்பமானது உள்ளான மண்டை யோட்டு அமுக்கம், குருதி ஒட்டத்தை சீரக்குதல் போன்ற கடுமையான மூளை நிலைமைகளுக்கெதிராக செயற் படுத்தப்படக்கூடியது என ஆய்வாளர் Aman Mann சொல்கிறார். இவ் ஆய்வாளர்கள் Cysteine, Alanine, Glutamine, மற்றும் Lysine போன்ற நான்கு அமினோ அமிலங்களுக்குமான பெப்ரைட் தொடரொழுங்கை கண்டுபிடித்துள்ளனர். இவை மூளை காயங்களை இனங்கண்டு செயற்படக்கூடியவை. இந்நான்கு அமினோ அமிலங்களும் மருந்து மற்றும் நுண் துகள்களை மூளையின் காயப்பட்ட பகுதிகளுக்கு எடுத்துச் செல்கின்றன. குறித்த மூலப்பொருள்களை பெப்ரைட்டுடன் இணைப்பதன் மூலம் அதனை மூளைக் காயங்களை அறிந்து செயற்படும் கருவியாக பயன்படுத்த முடியும் என்பது ஆய்வாளர்கள் கருத்து. மூலப்பொருட்களாக நொதியங்கள் அல்லது மரபணு அடக்க சிகிச்சைப் பொருட்களைப் பயன்படுத்தி வினைத்திறனான சிக்சையை மேற்கோள்ள முடியும் என சொல்லப்படுகிறது. இதே வேளை, மனிதர்களில் இவ் ஆய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### என்றும் இளமை வேண்டுமா?

சருமம் இளமையுடன் நீண்ட நாட்கள் இருப்பதற்கு போதிய அளவில் தண்ணீர் குடித்து வரவேண்டும். தண்ணீர் குடிப்பதுடன் நீர்ச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களையும் உட்கொண்டு வந்தால் உடலில் நீர்ச்சத்தை அதிகரித்து சரும செல்களை புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்ளலாம்.

எவ்வளவுக்கு எவ்வளவு தண்ணீர் மற்றும் நீர்ச்சத்துள்ள உணவுகளை எடுத்து வருகிறீர்களோ அவ்வளவுக்கு முதுமை யைத் தள்ளிப்போடலாம்.

தக்காளியில் அன்டி-ஒக்ஸ்டன்ட்டுகள் மட்டுமன்றி நீர்ச்சத்தும் அதிகம் உள்ளது. எனவே இவற்றை உணவில் அதிகம் சேர்த்து வந்தாலோ அல்லது ஜூஸ் போட்டு தினமும் ஒரு கிளாஸ் குடித்து வந்தாலோ சரும செல்கள் புத்துணர்ச்சி பெறும்.

கீரைகள் அனைத்துமே மிகவும் ஆரோக்கியமானது. அதிலும் பசலைக்கீரை உணவில் சேர்த்து வந்தால், அதில் உள்ள விட்டமீன்கள், கனிமச்சத்துக்கள் மற்றும் நீர்ச்சத்துக்களால் சருமம் மட்டுமன்றி உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

முள்ளங்கியில் அன்டி-ஒக்ஸ்டன்ட்டுகள் மற்றும் நீர்ச்சத்து அதிகம் உள்ளது. எனவே இவற்றை உட்கொண்டு வந்தாலும் முதுமையைத் தள்ளிப்போடலாம். தின மும் ஒரு வெள்ளரிக்காய் சாப்பிட்டு வந்தால் சருமத்திற்கு வேண்டிய நீர்ச்சத்து கிடைக்கும். மேலும் இது உடலை குளிர்ச்சியாகவும் வைத்துக்கொள்ளும்.



### ஞாபக சக்தியை அதிகரிக்கும் சொட்டு மருந்து

ஏற்கனவே குருதி கோளாறுகளுக்கெதிராக பயன்பாட்டிலுள்ள ஒரு குறித்த வகை மருந்து ஞாபக சக்தியையும் அதிகரிப்பதாக புதிய ஆய்வுகள் மூலம் தெரிய வருகி றது. பொதுவாக பயன்படுத்தப்படும், விலை குறைந்த Methylene blue இன் சிறிய அளவு மூளையின் செயற்றிறனை கூட்டி குறு கியகால ஞாபக சக்தி மற்றும் அவதானத்தை அதிகரிப்பதாக சொல்லப்படுகிறது. Methyl ene blue ஆனது Methemoglobin emia எனும் குருதி கோளாறுக்கெதிராக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நோய் நிலைமையின் போது ஒட்சிசனானது உடல் கலங்களுக்கு வினைத்திறனாக வழங்கப்பட முடியாது போகின்றது. Methylene blueஇன் மூளை ஞாபகசக்தியை அதிகரிக்கும் தன்மை 1970 களில் எலிகளில் மேற்கொள்ளப்பட்ட பரி சோதனைகள் மூலம் கண்டறியப்பட்டிருந்தது. இம்முறை இம் முயற்சி மனிதர்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற் கென 26 ஆரோக்கியமான, 22-62 வயதுக்கிடைப்பட்டோர் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். மேற்படி பரிசோதனையிலிருந்து Methylene blue ஆனது மூளையின் குறித்த பகுதி களை ஒழுங்கமைப்பது தெரிய வருகிறது. இவ் ஆய்வு முடிவுகள் Radiology எனும் ஆய்வுப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.



### தேங்காய் பாலின் மருத்துவ குணங்கள்

இரசாயனத்தைத் பயன்படுத்தி முடியை நேராக்கியவர்கள் மற்றும் இயற்கை முடி உடையவர்களுக்கும் கூட, முடி நன்றாக வளரவும், உறுதியாக இருக்கவும் ஈரப்பதம் அவசியம் அல்லவா? அதற்கு உறுதுணையாக இருக்கிறது தேங்காய் எண்ணெய். தேங்காய் எண்ணெயை போலவே, தேங்காயில் இருந்து எடுக்கப்படும் பாலிலும் பல மருத்துவ குணங்கள் உள்ளன. பெண்களின் சமை யலறை ஆகட்டும் அல்லது அலங்கார பொருட்கள் ஆகட்டும் அல்லது மருந்து பெட்டி ஆகட்டும், இவை அனைத்திலும் ஏதாவது ஒரு ரூபத்தில் தேங்காய் இருந்துகொண்டு தான் இருக்கிறது. பெண்களுக்கு சமைய லில் பயன்படுத்த அரைத்த தேங்காய் அல்லது தேங்காய் பால் பயன்படுகிறது. மேலும் தலைக்கு தேய்க்க எண்ணெய் வடிவமா கவும் பயன்படுகிறது.

தேங்காய்ப்பாலை ஸ்கால்ப்பில் படுமாறு தேய்த்து குளித்து வர உடலுக்கு குளிர்ச்சி கிடைப்பதோடு மட்டுமல்லாமல் முடிக்கு தேவையான இயற்கையான போஷாக்கு கிடைத்து முடி உதிர்வு குறைந்து மென்மையான கூந்தல் கிடைக்கும். தேங்காய் பாலில் போதுமான அளவு கல்சியம் இல்லாத போதிலும், பொஸ்பரஸ் நிறைந்துள்ளது. குறிப்பாக உடலில் உள்ள எலும்புகளை உறுதியாக்குவதற்கு பொஸ்பரஸ் முக்கிய ஊட்டச்சத்தாக விளங்குகிறது. அதிலும் பொஸ்பரஸை கல்சியத்துடன் சேர்த்து எடுத்துக்கொள்ளும் போது உடலில் பொஸ்பேட் கலப்பதால், எலும்பு உருக்குதல் தடுக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் உலகம்


## மாணவர்களுக்காக கூகுள் அறிமுகம் செய்யும் புதிய வசதி




சில மாதங்களுக்கு முன்னர் கூகுள் நிறுவனம் தான் வழங்கி வந்த Google Project எனும் சேவையினை நிறுத்தியிருந்தமை தெரிந்ததே. இந்த சேவையானது சிறுவர்களின் அறிவை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தற்போது மேற்கண்ட சேவைக்கு பதிலாக Google Cast எனும் சேவையினை அறிமுகம் செய்யவுள்ளதாக அந்த நிறுவனம் அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளது. இதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் விசேட அப்பிளிக்கேஷன் மூலம் மாணவர்கள் தமது கணணிகளை ஒன்றிணைத்து பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் வயர்லெஸ் தொழில்நுட்பம் மூலம் இணைக்கக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

இது தவிர வகுப்பறையிலுள்ள பெரிய திரை ஒன்றில் கற்பிக்கப்படும் விடயங்களை தமது கணணிகளிலும் பார்வையிடுவதுடன். தமது கணணியில் உள்ள விடயங்களை பெரிய திரையிலும் பகிர்ந்து கொள்ளக்கூடிய வசதியினை இது தரக்கூடியதாக இருக்கும். இந்த வசதியினை விளக்கும் வீடியோ தொகுப்பு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

## அறிமுகமாகும் மின்பொறிமுறை இதய இணைப்பு



தற்போது விஞ்ஞானிகள் இதய முடுக்கி போன்று செயற்படக்கூடிய. இதயத்தின் தன்மையை அவதானிக்கக்கூடிய புதியதொரு மின்பொறிமுறை இதய இணைப்பை கண்டுபிடித்துள்ளனர். இது இதயத்தின் தன்மையை அறிந்து அதற்குரிய சிறந்த பதில் தரக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

Harvard பல்கலைக்கழக ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்ட இந்நுண்ணிய இலத்திரனியல் கட்டமைப்பு இதயக் கலங்களில் பொருத்தப்படக்கூடியது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதயத் தாக்கினால் பாதிப்புக்குள்ளாகும் இதயத் தசைகளை இதைக்கொண்டு திருத்தமுடியும் எனவும் சொல்லப்படுகிறது. மேற்படி கட்டமைப்பு மனித உடலில் இலகுவாக பொருத்தப்படக்கூடியது. இது தொடர்பான விடயங்கள் Nature Nano technology எனும் ஆய்வு பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

## டிஜிட்டல் தொழில்நுட்பத்தை கணித்த ஆல்வின் டொ∴ப்லர் மரணம்



டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் உலக அளவில் ஏற்படும் பெரும் மாற்றத்தைக் கணித்தவரான ஆல்வின் டொஃப்லர் தனது 87ஆவது வயதில் காலமானார். இவர் தொழில்துறை வளர்ச்சிக்குப் பிந்தைய காலத்தின் குருவாகக் கருதப்படுபவராகவும் அறியப்படுகின்றார். கடந்த சில நாட்களாக உடல் நிலை பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் கடந்த திங்கட் கிழமை லொஸ் ஏஞ்சல்ஸில் அவர் இறந்துவிட்டதாக அவரது ஆலோசனை நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

ஆல்வின் டொஃப்லர் கடந்த 1970ஆம் ஆண்டு, தனது மனைவி ஹெய்டியுடன் இணைந்து, எதிர்கால அதிர்ச்சி (Future Shock) என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உற்பத்தித் துறையில் இருந்து கம்யூட்டர் சார்ந்த தகவல்பொருளாதாரத்துக்குஇந்தசமூகம் மாறும் என்பதை அதில் கணித்திருந்தார். அந்த மாற்றங்கள் சில நேரங்களில், மலைக்க வைப்பதாக இருந்தாலும் கூட, மனித சமூகத்துக்கு ஆக்கபூர்வமானதாக இருக்கும் என்று அவர் அந்த நூலில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


## புதிய மைல்கல்லை எட்டியது விண்டோஸ் 10 இயங்குதளம்




மைக்ரோசொப்ட் நிறுவனம் இறுதியாக விண்டோஸ் 10 இயங்குதளத்தினை அறிமுகம் செய்திருந்தமை தெரிந்ததே. இவ் இயங்கு தளத்தினை எதிர்வரும் ஜூலை 29ம் திகதி வரைக்கும் இலவசமாக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இயங்குதளத்தில் எந்தவிதமான குறைபாடுகளும் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான இயங்குதளமானது இதுவரை உலகெங்கும் சுமார் 350 மில்லியன் சாதனங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. விண்டோஸ் 8 இயங்குதளத்தினை பயன்படுத்திய பயனர்கள் விண்டோஸ் 10 இயங்குதளத்தின் சிறப்பம்சங்கள் தொடர்பில் திருப்தியடைந்துள்ளதாக அந்நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, எதிர்வரும் ஓகஸ்ட் 2ம் திகதி விண்டோஸ் 10 இயங்குதளம் அறிமுகம் செய்யப்பட்டு ஒரு வருடம் நிறைவடைகின்றமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## வயதாதலை தூண்டும் இலத்திரனியல் சாதனங்கள்



அதிகநேரம் தொலைபேசி உட்பட இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்துவது வயதாதலை தூண்டுவதாக வைத்தியர்கள் எச்சரிக்கிறார்கள். இதன் பாவனை சுருங்கிய நெற்றி, தொய்வுற்ற கழுத்து மற்றும் தளர்வுற்ற தாடைகளைத் தோற்றுவித்து முகத்தின் சாதாரண தன்மையை குலைத்து வயதான தோற்றத்தை அளிப்பதாக சொல்லப்படுகிறது.

அதிகளவு நேரம் இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதால் தொடர்ச்சியாக கீழ்நோக்கி வளைந்திருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. தொலைபேசிகளில் குறுந்தகவல்கள் அனுப்புகையில் அது கழுத்து மற்றும் தோள்மூட்டு வலிகளை ஏற்படுத்துகிறது. அதோடு தலைவலிகள் ஏற்படுகிறது. உடலின் ஏனைய பாகங்களிலும் வலிகளை ஏற்படுத்துகிறது. இந்தியாவில் தற்போது கிடைக்கும் தகவல்களின் படி கிட்டத்தட்ட 371 மில்லியன் வரையிலானோர் இணையம், தொலைபேசி பாவிப்பவர்கள். இதில் 40 வீதமானோர் 19 - 30 வயதுக்கிடைப்பட்ட இளம் வயதினர். இதன் பாவனை இளவட்டத்தினரிடையே விரல் மடங்குதல், மூட்டுவலிகள், தசைவலிகள், என்பு நோய்களைத் தோற்றுவிக்கலாம் எனச் சொல்லப்படுகிறது.

## மூளையின் சந்தத்தை மாற்றும் ஸ்மார்ட்போன் குறுந்தகவல்கள்



ஸ்மார்ட்போன் மற்றும் ஐபாட்டில் அனுப்பும் குறுந்தகவல்கள் மனித மூளையின் அதிர்வலைகளை மாற்றக் கூடியது என புதிய ஆய்வுகள் முலம் தெரியவ்ருகிறது. மக்கள் அதிகளவில் ஸ்மார்ட்போன் குறுந்தகவல்கள் மூலம் மற்றவர்களுடன் தகவல்களை பரிமாறுகின்றார்கள். ஆனாலும் அதன் நரம்பியல் விளைவுகளை அவர்களால் பெரிதளவில் அறிய முடிவதில்லை. William Tatum தலைமையிலான குழுவொன்று குறுந்தகவல்கள் அனுப்புகையில் மனித மூளையின் செயற்பாடு எவ்வாறு இருக்கிறது என ஆராய்ந்திருந்தது. இதற்கென 129 பேரிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

அவர்களது மூளையின் அலைகள் 16 மாதங்களுக்கு மேலாக EEGs மூலம் அவதானிக்கப்பட்டது. இதன் போது அவர்கள் குறுந்தகவல்கள் அனுப்பப்படும் போது அவர்களின் மூளையில் குறுந்தகவல் சந்தம் இருப்பது அவதானிக்கப்பட்டது. இது மற்றைய செயற்பாடுகளின் போது உண்டாகும் சந்தத்திலும் வேறு வகையினது என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

## தண்ணீரில் கப்பல் மிதப்பது எப்படி?



ஒரு நாணயத்தை தண்ணீரில் போட்டால் மூழ்கிவிடுகிறது. ஆனால், ஒரு பிரம்மாண்டமான கப்பல் தண்ணீரில் மிதக்கிறதே. மீனவர்கள் பயன்படுத்தும் படகு. மரம் போன்ற மிதக்கும் பொருள்களால் செய்யப்பட்டாலும். மிகப் பெரிய கப்பல்கள் இரும்பு போன்ற உலோகத்தால் செய்யப்படுகின்றன. அப்படியானால் அந்தக் கப்பல்கள் மூழ்கிவிட வேண்டுமே. எப்படி மிதக்கின்றன? கப்பல் தண்ணீரில் இருக்கும்போது. அதன் உடற்பகுதி ஓரளவு தண்ணீரில் அமிழ்ந்திருப்பதை பார்த்திருப்பீர்கள். அதாவது. கப்பலின் எடைக்குச் சமமான தண்ணீர் இடம்பெயரும். எனவே கப்பலின் குறிப்பிட்ட அளவு அடிப்பகுதி கடலில் அமிழ்ந்திருக்கும். 1000 டன் எடையுள்ள கப்பலின் உடற்பகுதி. அதே அளவு எடையுள்ள தண்ணீரை இடம்பெயரச் செய்யும். இதை. ஒரு கப்பலின் வெளியேற்றும் திறன் என்று குறிப்பிடுவார்கள்.

தண்ணீரில் அமிழ்ந்துள்ள கப்பலின் ஒவ்வொருபகுதியையும் தண்ணீர் அழுத்துகிறது. தண்ணீரில் இயற்கையாகவே உள்ள அழுத்தம் கப்பலின் உடற்பகுதி மீது செலுத்தப்படுகிறது. அதேநேரம் கப்பலின் எடையும் தண்ணீரை அழுத்துகிறது. இந்த இரண்டு அழுத்தங்களும் சமநிலையை ஏற்படுத்தும் வகையில் கப்பல்கள் வடிவமைக்கப்படுகின்றன. செங்குத்தான நிலையில் உள்ள அழுத்தங்களின் சக்தியே. கப்பலின் எடையை சமநிலைக்குக் கொண்டு வருகிறது. மேலும். கப்பலின் உட்பகுதியில் குறிப்பிட்ட அளவு காற்று இருக்கிறது. காற்றுக்கு வடிவமில்லாததால். நாம் அதை கணக்கில் எடுக்கத் தவறுகிறோம். கப்பலில் உள்ள பொருட்களை வெறுமனே திரட்டி தண்ணீரில் போட்டால் அது மூழ்கிவிடும். அடர்த்தி குறைவாக இருக்கும் வகையில் கப்பல் வடிவமைக்கப்படுவதும் கப்பல் மிதப்பதற்கு முக்கிய காரணம். ஒவ்வொரு கப்பலிலும். படகிலும் அதற்கான கொள்ளளவு உண்டு. அதை மீறினால் அது மூழ்கிவிடும்.

## கருப்பை புற்றுநோய்த் தாக்கத்தை அதிகரிக்கும் HPV தொற்று

Human Papilloma Virus (HPV) இன் நிலையான தொற்று பெண்களில் கருப்பை. கருவாய் மற்றும் குத புற்றுநோய் (Cervical. Vulvar. Vaginal Cancer) தாக்கத்தை அதிகரிப்பதாக தெரியவருகிறது. இதுபற்றி ஆய்வாளர் Susanne Kruger Kjaer கூறுகையில், ஏற்கனவே HPV தொற்றுக்கும், கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்குமிடையிலான தொடர்புகள் அறியப்பட்டிருந்தாலும், இவ் ஆய்வில் பெறப்பட்ட முடிவுகள் குத மற்றும் பிறப்புறுப்புக்களில் உண்டாகும் புற்றுநோய் பற்றிய மேலதிக தகவல்களை தருவதாக சொல்கிறார். HPV vaccine ஆனது முற்காப்பு நடவடிக்கையாகும்.

HPV தொற்றை அதன் ஆரம்ப கட்டத்திலேயே கட்டுப்படுத்துவதன் மூலம்அதன்நீண்டகாலதாக்கத்தினால் உண்டாகும் இதுபோன்ற நோய் நிலைமைகளை கட்டுப்படுத்த முடியும்என இவ் ஆய்வின்போது கண்டறியப்பட்டதாக Kjaer சொல்கிறார். முன்னைய ஆய்வுகளில் சிலவகை HPV தொற்று புற்றுநோய்களை (CIN) ஏற்படுத்தியது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதில் கருப்பை கழுத்து பகுதி மேற்புறத்தில் அசாதாரண கல வளர்ச்சிகள் அவதானிக்கப்பட்டிருந்தது. CIN3 ஆனது மேலும் உக்கிரமானது.

இது பற்றி மேலும் Kjaer கூறுகையில் HPV தொற்றினால் ஏற்படும் பெரும்பாலான CIN நோய் நிலைமைகள் பொதுவாக 1 அல்லது 2 வருடங்களுக்கிடையில் தாமாகவே உடலால் நீக்கப்பட்டுவிடுகின்றன. ஆயினும் மிக உக்கிரமான CIN2 அல்லது CIN3 தொற்றானது இலகுவில் நீக்கப்பட முடியாதவை. இவை மிகப்பெரிய அளவில் கருப்பை மற்றும் குத புற்றுநோய்களை தோற்றுவிப்பதாக சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## ஒலிம்பிக் மைதானத்திற்கு அருகே மனித உடல் பாகங்கள்



பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக்போட்டிகள் வருகிற ஓகஸ்ட் மாதம் 5ம் திகதி முதல் 21ம் திகதி வரை நடைபெற இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் படுஜோராக நடந்து வருகின்றன. வீரர்களுக்காக தனியாக கிராமம் கூட தயாராகிவிட்டது.

இந்நிலையில் ஒலிம்பிக்போட்டிகள் நடத்தவுள்ள மைதானத்திற்கு அருகே கடற்கரையில் துண்டு துண்டாக வெட்டப்பட்ட மனித உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த கடற்கரை பகுதியில் தான் வொலிபோல் போட்டிகள் நடைபெறவுள்ளது. இதனை கைப்பற்றிய பொலிசார் உடல் பாகங்களை ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளதுடன், இறந்துபோன நபர் பற்றிய விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இதற்கிடையே ஒலிம்பிக்போட்டிகளுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என ஒலிம்பிக்போட்டிகளை நடத்தும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## குலசேகராவை ஒப்பந்தம் செய்த இங்கிலாந்து கிளப் அணி



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான குலசேகராவை இங்கிலாந்தின் கிளப் அணியான சசெக்ஸ் ஒப்பந்தம் செய்துள்ளது. இங்கிலாந்தில் கிளப் அணிகளுக்கு இடையில் 'நாட்வெஸ்ட் டி20 பிளாஸ்ட்' கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்கும் சசெக்ஸ் அணி வங்கதேசத்தின் இளம் வேகப்பந்து வீச்சாளரான முஸ்டாபிஜுர் ரஹ்மானை ஒப்பந்தம் செய்தது.

ஆனால், ஐபிஎல் தொடரின் போது தொடைப்பகுதியில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வந்த முஸ்டாபிஜுர் இங்கிலாந்து செல்ல தாமதமானது. இதனால் இலங்கை அணியின் குலசேகராவை சசெக்ஸ் அணி ஒப்பந்தம் செய்துள்ளது. தற்போது கென்ட் அணிக்கு எதிராக ஆடிவரும் குலசேகரா, மிடில்செக்ஸ் மற்றும் கிளேமோர்கன் அணிகளுக்கெதிராகவும் விளையாட இருக்கிறார். முஸ்டாபிஜுர் ரஹ்மான் இந்த தொடரின் கடைசி 4 போட்டிகளிலும், றொயல் லண்டன் ஒருநாள் தொடரின் 4 போட்டிகளிலும் கலந்துகொள்வார் என்று சசெக்ஸ் அணி எதிர்பார்க்கிறது.

## யாழில் மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா



இளைஞர் கழக மாவட்ட சம்மேளனத்தின் 28வது மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் சம்மேளனத் தலைவர் பி.சுபாகர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிவன் அறக்கட்டளை நிதியத்தின் இயக்குனரும் தமிழ்ஈழவிடுதலை இயக்கத்தின் பிரச்சாரச் செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதம் கலந்துகொண்டு பரிசில்கள் வழங்கி வைப்பதையும் ஆண் பெண்கள் இருபாலாரும் விளையாட்டுக்களில் பங்கு கொண்டதையும் வெற்றி பெற்ற அணியினரையும் அருகில் தேசிய இளைஞர் சேவைகள்மன்றத்தின் யாழ்மாவட்ட உதவி இயக்குனர் தபேந்திரன் அகில இலங்கை இளைஞர் சம்மேளனத்தின் உப தலைவர் உஸ் விஜிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம்.

## முன்மாதிரியாக இருப்பது மிகப்பெரிய பொறுப்பு – கோஹ்லி



நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் யூரோ கால்பந்து சாம்பியன்ஷிப் தொடர் பிரான்சில் தொடங்கியது. நடைபெற்ற ஒரு லீக் போட்டியில் இங்கிலாந்து-ரஷ்யா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த போட்டியை காண இருநாடுகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மைதானத்தில் கூடியிருந்தனர். போட்டி நடைபெற்ற மார்ஸைல் மைதானம் ரசிகர்களின் கூக்குரலால் அலறியது. ஆட்டம் தொடங்கியது முதலே இருநாட்டு ரசிகர்களும் ஆரவாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். முதல் பாதி நேரத்தில் இரண்டு அணிகளும் கோல் அடிக்கவில்லை. 2வது பாதி நேரத்தில் ஆட்டத்தின் 73வது நிமிடத்தில் டியர் இங்கிலாந்து அணிக்காக கோல் அடித்தார். இதனால் இங்கிலாந்து அணி ரசிகர்கள்கொண்டாட்டத்தில்ஈடுபட்டனர். இது இங்கிலாந்து ரசிகர்களை விட அதிக அளவில் இருந்த ரஷ்யாவின் ரசிகர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. 92வது நிமிடத்தில் ரஷ்யாவின் பெரேசுட்ஸ்கி கோல் அடித்தார். இதனால் ஆட்டம் 1-1 என சமநிலையில் முடிந்தது.

இதனால் ரஷ்ய ரசிகர்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தினார்கள். உடனே, ஆட்டம் முடிப்பதற்கான விசில் ஊதப்பட்டது. அப்போது இரண்டு நாட்டு ரசிகர்களுக்குமிடையேமோதல்ஏற்பட்டது. இதில் ரஷ்யாவின் ரசிகர்கள் இங்கிலாந்து ரசிகர்களை அடித்து உதைத்து துவம்சம் செய்தனர். அவர்களை கேலரியில் இருந்து மிதித்து தள்ளி தாக்கினார்கள். அத்துடன் மைதானத்திற்கு வெளியேயும் மோதல் ஏற்பட்டது. பின்னர் பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி மோதலை கட்டுப்படுத்தினர். இந்த தாக்குதலில் 100க்கும் மேற்பட்ட இங்கிலாந்து ரசிகர்கள் பலத்த காயம் அடைந்தனர்.

20 வயதுக்கு உட்பட்ட பாடசாலை ரக்பி போட்டிகளில் இடம்பெற்ற ஒழுக்கயீனம் காரணமாக மூன்று முன்னணி பாடசாலைகளுக்கு போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கண்டி தர்மராஜா கல்லூரிக்கு 9 மாதங்களும், கொழும்பு கெரி கல்லூரி 8 மாதங்களும், மற்றும் கண்டி திருத்துவ கல்லூரிகளுக்கு 6 மாதங்களுக்கும் போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த போட்டித் தடையினை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெஸ்ஸிக்கு சிலைவைத்து கௌரவித்த ஆர்ஜென்டினா மக்கள்



உலகில் அதிக ரசிகர்கள் கொண்ட வீரர்களில் ஒருவரும், ஆர்ஜென்டினா கால்பந்து அணித்தலைவருமான லயோனல் மெஸ்ஸி தனது ஓய்வை அறிவித்த இரண்டே நாட்களில் ஆர்ஜென்டினா மக்கள் மெஸ்ஸியின் வெண்கல சிலை திறந்து அவரை கௌரவித்துள்ளனர். கடந்த ஞாயிறன்று நடைபெற்ற கோபா அமெரிக்கா கால்பந்து இறுதிபோட்டியில் சிலி அணியிடம் ஆர்ஜென்டினா தோல்வியடைந்தது. இத்தோல்வியால் ஏற்றுக்கொள்ள முடியாத மெஸ்ஸி சர்வதேசபோட்டிகளில் இருந்து தான் ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

ஆர்ஜென்டினா தலைநகர் Buenos Airesயில் அவரது வெண்கலசிலை திறக்கப்பட்டிருக்கிறது. பியூனஸ் அயர்ஸ் நகரத்தின் மேயர் இச்சிலையை திறந்து வைத்தார். அப்போது பேசிய அவர், மெஸ்ஸி தனது ஓய்வு முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என கோரிக்கை விடுத்தார். மேலும், அவர் நிச்சயமாக எதிர்வரும் 2018ம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலக கிண்ணத்தில், ஆர்ஜென்டினா அணியை வழி நடத்தி வெற்றிகரமாக கிண்ணத்தை கைப்பற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனக் கூறியுள்ளார்.

## ஒரு நிமிட தாமதத்தால் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்த வீரர்கள்




தமிழகத்தைசேர்ந்த இரண்டுஓட்டப்பந்தய வீரர்கள், ஒரு நிமிட தாமதத்தினால் ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்துள்ள சம்பவம் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 56வது தேசிய தடகள போட்டிகள் தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் தொடங்கி நடைபெற்று வருகின்றன. முதல் நாளில் நடைபெற்ற போட்டிகளில் தமிழக அணி மூன்று தங்கப்பதக்கங்களை வென்றது. பெண்களுக்கான 10,000 மீட்டர் ஓட்டப்பந்தய போட்டியில் தமிழக வீராங்கனை சூர்யா தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். அவர் பந்தய தூரத்தை 33 நிமிடம் 27.01 விநாடிகளில் கடந்தார்.

ஆனால், ஓகஸ்ட் மாதம் நடைபெற உள்ள ரியோ ஒலிம்பிக் போட்டியில் 10,000 மீட்டர் ஓட்டப்பந்தய போட்டிக்கு தகுதி பெற,போட்டி தூரத்தை 32 நிமிடம் 15 விநாடியில் கடந்திருக்கவேண்டும். ஒரு நிமிடம் தாமதமானதால் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்துள்ளார் சூர்யா. அதேபோல 5,000 மீட்டர் ஓட்டப்பந்தய போட்டியில் தமிழக வீரரான லெட்சுமணன் பந்தய தூரத்தை 14 நிமிடம் 6 நொடிகளில் கடந்து தங்கப்பதக்கம் வென்றார். ஆனால், ரியோ ஒலிம்பிக் தகுதி நேரமான 13 நிமிடம் 25 நொடிகளில் போட்டி தூரத்தை கடக்காததால் அவரும் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்துள்ளார்.

## முன்னணி வீராங்கனை முருகுஸா தோல்வி



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் றெனிஸ் போட்டி லண்டன் நகரில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீராங்கனையான ஸ்பெயினின், கார்பைன் முருகுஸா அதிர்ச்சியளிக்கும் வகையில் தோல்வி கண்டு வெளியேறியுள்ளார். இதில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் முருகுஸாவும், ஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த ஜானா செபலோவா-ம் 2வது சுற்றில் மோதினர். இப்போட்டியின் ஆரம்பம் முதலே செபலொவா ஆதிக்கம் செலுத்தி வந்தார். இப்போட்டியில் முருகுஸா 3-6,2-6, என்ற நேர் செட் கணக்கில் செபலொவிடம் எளிதாக வீழ்ந்தார். மேலும் இப்போட்டி 58 நிமிடங்களில் முடிவு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டி விரைவில் முடிவதற்கு முருகுஸா செய்த அதிக பிழைகளே காரணம் என்று கூறப்படுகிறது. உலக தரவரிசையில் 2ம் நிலையில் இருக்கும் முருகுஸா, 124ம் நிலையில் உள்ள ஸ்பெயினின் செபலோவாவிடம் வீழ்ந்ததன் மூலம் 2வது சுற்றுடன் வெளியேறினார்.

சமீபத்தில் நடைபெற்ற பிரெஞ்ச் ஓபன் றெனிஸ் போட்டியில் முருகுஸா சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம், கடந்த 18 ஆண்டுகளில் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மகுடம் வென்ற முதல் ஸ்பெயின் வீராங்கனை என்ற பெருமையை பெற்றார். 2015ம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் றெனிஸ் போட்டியில் முருகுஸா இறுதி போட்டி வரை சென்றடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. செபலோவா கூறுகையில், இன்று நான் வெற்றி பெறுவேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. நான் இன்று சிறப்பாகவே விளையாடினேன். அதனால் வெற்றி பெறமுடிந்தது. இந்த வெற்றிக்கு தகுதியானவள் என்றும், கடந்த ஆண்டு முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலப்பை(ரோமானியா) வீழ்த்தினேன் என்றும் நினைவுபடுத்தினார். இது என் வாழ்வில் மறக்க முடியாத நினைவுகள் என்றும் கூறினார்.

## ஒலிம்பிக்கை புறக்கணிக்கவுள்ள ஜேசன் டே

முதற்தர கொல்ஃப் (golf) வீரரான ஜேசன் டே (Jason Day) இந்த ஆண்டு றியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை புறக்கணிக்கவுள்ளார். சீக்கா வைரஸ் பரவலைக் காரணம் காட்டி அவர் [illegible] அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 28 வயதான அவுஸ்திரேலியரான அவர், தமது மனைவி கருவுற்றிருப்பதாகவும், இதனால் வைரஸ் தாக்கம் குறித்து அச்சமடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சீக்கா வைரஸ் கர்ப்பிணிப் பெண்களையும், சிசுக்களையுமே பாதிக்கின்ற நிலையில், [illegible]ர் இந்த அச்சத்தை வெளியிட்டுள்ளார். இதன்படி உலகின் ஆறு முக்கிய விளையாட்டு வீரர்கள் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளை புறக்கணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## சார்லி ஹெப்டோ மீது மீண்டும் தாக்குதல்



பிரான்சில் இஸ்லாமிய தலைவர்கள் பற்றிய கேலிச் சித்திரத்தை வெளியிட்ட காரணத்திற்காக சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகம் மீது கடந்தாண்டு மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பத்திரிகையாளர்கள் 9 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் தற்போது மீண்டும் தாக்குதல் நடத்தப்படும் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல் முதலில் சார்லி ஹெப்டோ முகப்புத்தகத்தில் வெளியானதாகவும். பின் அந்த பக்கம் நீக்கப்பட்டதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பிரபல நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. சார்லி ஹெப்டோ பத்திரிகையின் ஆசிரியர்கள் மீது இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி பத்திரிகை ஆசிரியருக்கு குறுந்தகவல் அனுப்பப்பட்டதாகவும், அதில் சார்லி ஹெப்டோ பத்திரிகையின் ஆசிரியர்களை கொல்வதற்கான திட்டம் இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுதொடர்பாக பிரெஞ்ச் பத்திரிகைகளிடம் கலந்துரையாட பத்திரிகை மறுத்துள்ள நிலையில். பொலிசார் விசாரணையை தீவிரப் படுத்தியுள்ளனர்.

## மிகப்பெரிய வைரக்கல்லை ஏலத்தில் விற்க முடியவில்லை



லண்டனில் நடைபெற்ற ஏல விற்பனையில் உலகில் மிகப்பெரிய வைரக்கல்லை விற்பனை செய்ய முடியாது போயுள்ளது. உலகிலேயே மிகப்பெரிய வைரக்கல் எனக் கருதப்படும் லாசேடி லா ரோனா என்று பெயரிடப்பட்டுள்ள வைரக்கல் லண்டனில் ஏலம் விடப்பட்டது.

ஏல விற்பனையில் வைரக்கல்லுக்கு அதிகபட்ச விலையைப் பெறமுடியாத காரணத்தினால். அதனை விற்பனை செய்ய முடியாது போயுள்ளது.

போஸ்வானா நாட்டில் கடந்த நவம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரக்கல் 1,109 கரட் எடை கொண்டது. இந்த வைரக்கல் 2.5 பில்லியன் ஆண்டுகள் பழமையானது எனவும் கூறப்படுகிறது. இதனை 70 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் ஏலத்தில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 61 மில்லியன் அமெரிக்க டொலருக்கே ஏலம் கோரப்பட்டதாகத் தெரியவருகிறது.

## பிரதமர் பதவிக்கு போட்டியிடவில்லை – போரிஸ் ஜான்சன்




பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பதவிக்கான மனுத்தாக்கல் முடிவடைந்துள்ளது. இந்நிலையில் தலைவர் பதவிக்கும், பிரதமர் பதவிக்கும் தான் நிற்கப்போவதில்லை என லண்டனின் முன்னாள் மேயரான போரிஸ் ஜான்சன் கூறியுள்ளார். சக உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு, பாராளுமன்றத்தின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு இந்த முடிவை எடுத்ததாக கூறியுள்ளார்.

அவர் கன்சர்வேடிவ் கட்சியின் அடுத்த தலைமைக்கு தனது முழு ஆதரவை வழங்க போவதாகவும். மக்களின் நிலைப்பாட்டை முழுமை பெறச்செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரித்தானியா வெளியேவர மக்கள் முடிவு செய்த நிலையில். பிரதமர் பதவியை ராஜினாமா செய்யபோவதாக டேவிட் கமரூன் அறிவித்தார். இதனையடுத்து அடுத்த பிரதமராகவும், கன்சர்வேடிவ் தலைவராகவும் போரிஸ் ஜான்சன் தெரிவாகலாம் என கூறப்பட்டு வந்த நிலையில் தான் போட்டியிடவில்லை என அறிவித்துள்ளார்.

1980ம் ஆண்டுகளில் இருந்து பத்திரிகையாளராக விளங்கியவர் ஜான்சன். இப்போது பெரும் செல்வந்தராகியுள்ள போதிலும், பத்திரிகை தொழிலில் தனக்குள்ள அனுபவத்தைவிட்டு விலக அவர் தயாராக இல்லை. இங்கிலாந்தின் முன்னணி பத்திரிகையான 'தி கார்டியன்' நாளிதழில் இப்போதும் கட்டுரைகளை எழுதி வருகிறார். பொதுவாக்கெடுப்பு நடந்த போது இணைந்திருப்பதால், பிரிந்து செல்வதால் என்ன நடக்கும் என்பது குறித்து தன்னுடைய நிலைப்பாட்டை விரிவாக எழுதினார். அதாவது பிரிந்து செல்லவேண்டும் என்று குறிப்பிட்டார். இவரது மனைவியின் பெயர் டிப் சிங். இவர் இந்தியாவின் பஞ்சாப்பை பூர்வீகமாக கொண்ட சீக்கியர். கன்சர்வேட்டிவ் கட்சியின் எம்.பி.யும், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் முதல் இந்து எம்.பி என்ற பெருமைக்கு சொந்தக்காரர்.

## ராணுவ வீரர்களுடன் நடுவானில் மாயமான விமானம்



ரஷ்ய நாட்டில் 10 ராணுவ வீரர்களுடன் பயணமான விமானம் ஒன்று நடுவானில் மாயமாகியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சைபீரியாவில் உள்ள Krasnoyarsk என்ற பகுதியில் காட்டுத் தீ பரவியது. தீயை கட்டுப்படுத்த Russian IL-76 என்ற மீட்பு விமானத்தில் 10 ராணுவ வீரர்கள் அனுப்பப்பட்டனர். காட்டுப்பகுதிக்கு சென்ற அந்த விமானம் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது, திடீரென காணாமல் போயுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவலை தொடர்ந்து பராசூட்கள் உதவியுடன் சுமார் 100 மீட்புக்குழுவைச் சேர்ந்த வீரர்கள் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருவதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டவர்களை கவர்ந்திழுக்க புதிய திட்டங்கள்



சர்வதேச திறமையாளர்களை கவர்ந்திழுக்கும் வகையில் புதிய திட்டங்களை தேர்தல் வாக்குறுதிகளாக ஹிலாரி கிளிண்டன் அறிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட உள்ள ஹிலாரி கிளிண்டன், தொழில்நுட்பத் துறையில் தான் அமுல்படுத்தப்போகும் புதிய திட்டங்கள் மற்றும் கொள்கை முடிவுகள் குறித்து, டென்வர் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார். ஓட்டுநர் இல்லாத கார், பொருட்களுக்கான இணையம் 'ஸ்மார்ட் ஃபேக்டரி' போன்றவற்றுக்கு தேவையான 5ஜி தொழில்நுட்பம் மற்றும் புதிய தலைமுறை வயர்லெஸ் தொழில்நுட்பங்களை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவது, அதிவிரைவு இணைய சேவைகளை 2020க்குள் அனைத்து அமெரிக்க வீடுகளுக்கும் கிடைக்கச்செய்வது உள்ளிட்ட திட்டங்களை ஹிலாரி முன்வைத்துள்ளார். 'ஸ்டெம் மாஸ்டர்ஸ்' எனப்படும், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணக்குத் துறையில் முனைவர் பட்டம் முடித்த வெளிநாட்டு மாணவர்களுக்கு, நிபந்தனை அடிப்படையிலான 'கிரீன்கார்ட்' அந்தஸ்து வழங்கும் திட்டத்தை ஹிலாரி முன்வைத்துள்ளார்.

பல்வேறு பல்கலைக்கழகங்களில் கல்வி பயில, ஆண்டுதோறும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்கள் செல்கின்றனர். குறிப்பாக, அறிவியல் தொழில்நுட்பத்துறையில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கையே அதிகம். எனவே, ஹிலாரியின் வாக்குறுதியால் இந்திய மாணவர்கள் பயன்பெறுவர். சர்வதேச அளவில் தேர்ந்த தொழில் முனைவோர், அமெரிக்காவில் குறிப்பிட்ட அளவுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, உற்பத்தித்திறனையும் நிரூபித்தால், அவர்களுக்கு பிரத்தியேகமான ஸ்டார்ட் அப் விசா வழங்குவது குறித்தும் ஹிலாரி அறிவித்துள்ளார். வெளிநாட்டு தொழில்முனைவோர் தங்கள் திறனை நிரூபித்து, 'கிரீன் கார்ட்' பெறவும் இதில் வாய்ப்பு அளிக்கப்படும்.

## நாய் இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட 22பேருக்கு சிறை



சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் 5000 கிலோகிராமிற்கும் மேற்பட்ட நாய் உணவுகளை தயாரித்து விற்பனை செய்து வந்த 22 பேருக்கு 8 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. விஷமுடைய 5000 கிலோகிராம் நாய் உணவு, விஷமுடைய 11,000 பறவை உணவு மற்றும் 500 கிலோகிராம் இரசாயன உணவுகள் தொடர்பில் 14 வழக்குகள் தற்போது Rugao நகரில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 7000 கிலோகிராம் நாய் இறைச்சிகள் வாங்கிய ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த உணவானது ஜியாங்சு மாகாணங்களில் உள்ள நகரங்கள் மற்றும் உணவகங்களில் விற்பனை செய்து வருவதாக குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

Guangdong மற்றும் Zhejiang மாகாணங்களில் உள்ள உணவகங்களில், 11 ஆயிரம் பறவைகளைக் கொன்று இறைச்சிதயாரித்து விற்பனை செய்து வந்த 8 பேரையும் உள்ளூர் பொலிஸார் கைது செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாய் இறைச்சி திருவிழா செய்வதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாய்கள் கொல்லப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து சீன பொலிஸ் அதிகாரிகள் மேலதிக ஆய்வுகள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் இவர்கள் தான்



துருக்கியில் Ataturk விமான நிலையத்தில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் 43 பேர் கொல்லப்பட்டனர். 240 பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதலை ஐஎஸ் தீவிரவாதிகள் தான் நடத்தியிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் நிலையில். அவர்கள் தரப்பில் எந்தவித தகவலும் வெளியாகவில்லை. இந்நிலையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளின் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. அவர்கள் தற்கொலை குண்டுகளை தங்கள் ஆடையில் வைத்திருந்ததும். ஏகே 47 ரக துப்பாக்கிகளையும் வைத்திருந்ததும் தெரிய வந்துள்ளது.

மேலும் மூன்று பேரிடமும் ரஷ்ய நாட்டு கடவுச்சீட்டு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்திலிருந்து 12 மைல் தொலைவில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் 32 நாட்களுக்கு முன் முதல் மாடியில் வீடு எடுத்து தங்கியுள்ளனர். அவர்களிடம் தங்களது கடவுச்சீட்டை காண்பித்ததுடன். ரஷ்ய மொழியில் பேசியுள்ளனர். அடுக்குமாடி குடியிருப்பில் வசித்த போது அண்டை வீட்டாருடன் எந்தவித தொடர்பும் வைத்துக்கொள்ளாத தீவிரவாதிகள். அடிக்கடி தங்களுக்குள் சத்தம் போட்டு வாக்குவாதம் செய்து வந்துள்ளனர். மிக கூலாக காரில் ஏறி விமான நிலையம் வந்த தீவிரவாதிகள் தனித்தனியாக பிரிந்து சென்று தாக்குதலை நடத்தியுள்ளனர். முதலில் வெளிநாட்டு பயணிகளை நோக்கி சரமாரியாக சுட்ட தீவிரவாதிகள் பின்னர் பொதுமக்களுடன் ஒன்றாக கலந்து தாங்களும் தப்பி ஓடுவதைப்போல நாடகமாடியுள்ளனர். அப்போது தங்கள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர். மேலும் இவர்கள் மூவரும் கடந்த ஓராண்டுக்கு முன். ரக்கா நகரில் ஐஎஸ் தீவிரவாதிகளிடம் பயிற்சி பெற்றிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். அவர்கள் தங்கியிருந்த வீட்டை சோதனை செய்த பொலிசார். அங்கிருந்த பொருட்களை கைப்பற்றியதுடன் விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பாட்டி ஒருவருக்கு போதைப்பொருள் கடத்தல் வழக்கில் மரண தண்டனை விதித்து வியட்நாம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. Nguyen Thi Huong என்ற 76 வயது பாட்டி ஒருவர் 1.6kg போதைபொருளை கடத்திய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு வியட்நாம் Ho Chi Minh City நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இப்பெண்மணி, தான் கொண்டு சென்ற பொருளில் போதைபொருள் இருந்தது தெரியாது என்று கூறியுள்ளார். இருப்பினும் பிரதிவாதியின் பதிலை ஏற்க மறுத்த நீதிபதி அவருக்கு மரண தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும், எனது உடல்நிலை மோசமாக உள்ளது எனக் கூறி அவர் மேல்முறையீடு செய்துள்ளார். ஆனால் இந்த மேல்முறையீடு தோல்வியடையும் விதத்தில். விஷ ஊசி மூலம் இவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் எனக் கூறப்படுகிறது. இந்த வழக்கு குறித்து அவுஸ்திரேலியா வெளியுறவுத்துறை அமைச்சர் கூறியதாவது. தூதரகம் சார்பில் அவருக்காவும், அவரது குடும்பத்தினருக்காகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறியுள்ளார். உலக நாடுகளில் போதைபொருள் கடத்தல் வழக்கில் கடுமையான சட்டங்களை பின்பற்றி வரும் நாடுகளில் வியட்நாம் நாடும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்



சுகுநியாங் ஷான் மலை (சிச்சுவான் மாநிலம்)

## இவர் குழந்தை என்றால் உங்களால் நம்பமுடிகிறதா...?

உலகிலேயே அதிக உடல்பருமனுள்ள பத்து வயது சிறுவன் கண்டறியப்பட்டுள்ளார். இந்தோனேசியாவை சேர்ந்த ஆர்யா பேர்மன் என்ற 10 வயது சிறுவன் 192 கிலோகிராம் நிறையினை கொண்டுள்ளார். இச்சிறுவனுக்கு சாதாரன உடைகள் அணியமுடியாமையால் சாரத்தினை மட்டுமே உடையாக அணிந்து வருகின்றார். இந்தோனேஷியாவிலுள்ள மேற்கு ஜாவா மாகாணத்தில் இருந்து. ஆர்யா தூரம் நடக்க முடியாமையால் படிப்பும் கைவிடப்பட்டுள்ளது.

குறித்த சிறுவனின் தாய் ரோகயாய் தெரிவிக்கையில், எனது மகனுக்கு நிரந்தர பசியெடுக்கும். ஒரு வேளை உணவில் இரு பெரியவர்களின் உணவுகளை உண்ணும் திறன் கொண்டவர். உணவு உண்ணுவதும் உறங்குவதுமே அவனின் அன்றாட நடவடிக்கையாகும். உறங்காத வேளையில் நீர்தடாகத்தில் படுத்து இருப்பான். இப்போது எனது மகனுக்கு வழங்கும் உணவுகளை குறைத்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.





### சுவிட்சர்லாந்து

ஆல்ப்ஸ் மலை உங்களுக்கு துணையாகவே கூடவரும். இந்திய வெப்பத்தை மறக்கச் செய்யும் குளிர் பிரதேசம். பனி படர்ந்த மலைகள். இயற்கையின் கொஞ்சும் அழகு எங்கெங்கு நோக்கினும் உங்கள் கண்களுக்கு தென்படும். மலையேற்றம், ஹெலி-ஸ்கையிங், ஸ்கையிங் என பலவகை பொழுது போக்கு அம்சங்களுக்கு இங்கு வாய்ப்பு உள்ளது. ஜங்பிரொஜோஸ்-ஐஸ் பேலஸ், ஸ்பின்ஸ் ஒப்சர்வேடரி, மவுண்ட் டைட்லிஸ்-டைட்லிஸ் கோன்டோலா, டைட்லிஸ் க்ளிப் வாக், ஜெர்மட்-ஜிவெஸிமென், மோன்ட்ரெக்ஸ், மோன்ட் பிளான்க், லேக் பிரின்ஸ், ஜெனிவா ஏரி, இன்டர்லகேன் போன்றவை சுற்றிப்பார்க்க வேண்டிய இடங்கள்.



### கிரீஸ்

சூரிய ஒளியுடன் கூடிய பீச்சுகள், குட்டி தீவுகள், கண்கவரும் கட்டிடங்கள் என சூழ்ந்து, ரொமான்டிக் மூடில் விடுமுறையை கழிக்க ஏற்ற இடம் கிரீஸ். சன்டோரினி, சைன்டக்மா சதுக்கம், நாடாளுமன்றம், அகாடமி, ராணுவ வீரர் நினைவகம், பார்தனோன், டெல்பி-டெம்பிள் ஒப் அப்பல்லோ, அதேனியன் டிரசரி, ஒல்டர் ஒப் சியான்ஸ், ஒலிம்பியா-டெம்பிள் ஒப் ஜீயஸ், டெம்பிள் ஒப் ஹீரா, மேட்ருன், மைகோனோஸ், பேரடைஸ் பீச், மைகோனஸ் கேஸ்டில், பர்னாசோஸ் ஆகியவை ரசிக்க வேண்டிய இடங்களாகும்.
























இப்பத்திரிகை இலக்கம்154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 03.07.2016 அன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org